Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன்: 369

தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 6 ஆம் நாள் | ரபி ஆகிர் 11 | (22-9-61) | வெள்ளிக்கிழமை | இதழ் 189

★ நாவிற்கு ருசியும்
★ உடலுக்கு உறுதியும்
அளிப்பது
மொணரு அன் ரோஸ்
பப்படங்கள்
மயில், ரோஸ் மூவர்ண அடையாளங்களைக் கவனித்து வாங்குக.
கண்டிப்பகுதி விநியோகஸ்தர்கள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனியா.

அரசியல் திட்ட திருத்தம்பற்றி பரிசீலனை செய்ய நியமிக்கப்படும் தெரிவுக் குழுவில்....

# தமிழரசுக் கட்சிக்கு இடமிருக்குமா?

## பார்லிமெண்டில் உடுப்பிட்டி எம்.பி. கேள்வி

### " சகல கட்சிகளையும் சேர்க்க நம்புகிறோம் "

—உணவு அமைச்சர்

கொழும்பு, வியாழன்

"இலங்கையை ஒரு குடியரசாக்குவதற்கும் அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாத மளிப்பதற்காகவும் அரசியல் திட்டத்தில் திருத்தம் செய்வது பற்றி பரிசீலனை செய்வதற்கு பார்லிமெண்டின் இரு சபைகளிலிருந்தும் நியமிக்கப்படவிருக்கும் தெரிவுக்குழுவில் தமிழரசுக் கட்சிக்கும் அங்கத்துவமளிக்கப்படுமா?" என்று உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இன்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் கேட்டார்.

அரசியல் திட்டத்தைத் திருத்துவது பற்றி பரிசிலனை செய்வதற்கு இருசபைகளையும் கொண்ட ஒரு தெரிவுக்குழு நியமிக்க கோரும் பிரேரணையொன்றை சபை முதல்வரின் சார்பில் உணவு அமைச்சர் திரு. இலங்கரத்தின இன்று சபையில் கொண்டுவந்தார்.

திரு. இலங்கரத்தின பேசுகையில் தெரிவுக்குழுவில் சகல எதிர்க்கட்சிகளுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமென்று அரசாங்கம் நம்புவதாகக் கூறினர்.

உபசபாநாயகர் திரு. ஹியூ பெர்னண்டோ தலைமையில் ஜனப்பிரதிநிதிகள்சபை இன்று பிற்பகல் கூடியது.

1946—47-ம் வருடத்திய இலங்கை அரசியல்திட்டத்தையும் அதனுடன் சம்பந்தப்பட்ட எழுத்திலுள்ள சட்டங்களையும் திருத்துவதுபற்றி ஆராய்வதற்கு நியமிக்கப்படும் கூட்டுத் தெரிவுக்குழுவுக்கு ஜனப்பிரதிநிதிகள் சபையிலிருந்தும் செனட் சபையிலிருந்தும் பதினெரு அங்கத்தவர்கள் நியமிக்கப்படவேண்டு மென்று உணவு வர்த்தக அமைச்சர் திரு டி. பி. இலங்கரத்தின சபை முதல்வர் திரு. சி. பி, டி. சில்வ வின் சார்பில் பிரேரணையொன்றைக் கொண்டுவந்தார்.

இலங்கையை ஒரு குடியரசாக்குதல்; அடிப்படை உரிமைகள் உத்தரவாதம்; செனட் சபையின் நிலைமை; ஜனப்பிரதிநிதிகள் சபையில் நியமன அங்கத்தவர்கள் நிலைமை; அரசாங்க சேவை கமிஷன்; நீதிபரிபாலனசேவைஆகியவைகள் பற்றி இந்த தெரிவுக்கமிட்டிஆராயும்.

இந்தத் தெரிவுக்குழுவுக்கு ஆட்களை நேரில் அழைக்கவும் தஸ்தாவேஜுகள், பதிவுகளை எடுப்பித்து பரிசீலனை செய்யவும் அதிகாரமிருக்கும்.

அமைச்சர் இலங்கரத்தின இப்பிரேரணையைக் கொண்டு வந்ததும் உடுப்பிட்டி எம். பி. திரு.எம்.சிவசிதம்பரம் எழுந்து பின்வருமாறு கூறினர்.

### தமிழரசுக் கட்சிக்கு இடமுண்டா?

இந்த உத்தேச தெரிவுக் குழுவில் சபையின் சகல பிரிவினருக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுமா? என்ற பிரச்சினை எழுந்துள்ளது:-

ஜனப்பிரதிநிதிகள் சபையில் இரண்டாவது பெரிய எதிர்க்கட்சியாக விளங்கும் தமிழரசுக் கட்சியின் நிலைமை என்ன என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கொட்டாவ எம். பி. திரு. ரொபர்ட் குணவர்த்தன பேசுகையில் இந்தத் தெரிவுக் குழுவில் பிரதிநிதித்துவம் வகிக்கும் விஷயம் சம்பந்தமாக விவாதிப்பதற்கு சபைக்கு ஒரு சந்தர்ப்பம் அளிக்கப்படுமா என்பதை அறியவிரும்புவதாகக் கூறினர்.

செனட் சபையையே இல்லாமல் செய்துவிடவேண்டுமென்ற ஒரு யோசனை இருக்கும்பொழுது தெரிவுக்குழுவில் செனட்டர்களையும் அரசாங்கம் நியமிக்க விருக்கிறதா? என்று திரு. ரொபர்ட் கேட்டார்.

### அங்கத்தவர் எத்தனைபேர்?

தெரிவுக் குழுவில் சரியாக எத்தனை பேர் அங்கம் வகிப்பார்கள்? என்று திரு. ஏ. ரத்னயக்கா கேட்டார்.

புலத் சிங்கள எம். பி. திரு. எட்மன்ட் சமரக்கொடி பேசுகையில் செனட்சபை சம்பந்தமாகஅரசாங்கத்தின் கொள்கை என்னவென்பதைத் நாம் அறிந்துகொள்ள விருப்பதாகக் கூறினர். திரு. சமரக்கொடி மேலும் கூறியதாவது:—

செனட்சபையை ஒழித்து விடுவதென சில காலத்திற்கு முன்னர் அரசாங்கம் தெரிவித்திருந்தபோதிலும் சமீபத்தில் இதற்குமாருன வகையில் அரசாங்க எம். பிக்கள் சிலர் கருத்து வெளியிட்டிருந்தனர். செனட்சபை பற்றி தெரிவுக் குழு பரிசீலனைசெய்யவேண்டுமாதலால் இவ்விஷயம்பற்றி அரசாங்கத்திடமிருந்து திட்டவட்டமான பதிலைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

### அரசாங்கம் கலந்துகொள்ளும்

இதற்கு உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்தின பதிலளிக்கையில் பின்வருமாறு கூறினர்:—

தெரிவிக்குழு நியமிக்கப்படுவதற்கு முன்னர் எதிர்க்கட்சிகளை அரசாங்கம் கலந்தாலோசனை செய்யும். இதுவிஷயத்தில் காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் கொள்கையை அரசாங்கம் பின்பற்றி சகல அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசனை செய்யும்.

தெரிவுக்குழுவுக்கு சபையிலுள்ள சகல பிரிவைச் சேர்ந்தவர்களையும் சகல கட்சியைச் சேர்ந்தவர்களையும் அங்கத்தவர்களாக நியமிப்பதற்கு அரசாங்கம் கருதியுள்ளது.

நான் சமர்ப்பித்துள்ள பிரேரணையில் மூன்ருவது அம்சம் செனட்பற்றிச் குறிப்பிடுவதால் செனட்சபை நிலைமைபற்றி அங்

(8ம் பக்கம் பார்க்க)

## பண்டாரநாயக்கா நினைவு

கொழும்பு, வியாழன்

தபால் தந்தி முன்னுள் மந்திரி திரு. எஸ். நடேசபிள்ளை, காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா ஞாபகார்த்தமாகநிகழ்த்திய சொற்பொழிவொன்று இம்மாதம் 24-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரவு 9மணிக்கு இலங்கை வானெலியில் ஒலிபரப்பப்படும்.

—

## இந்தியாவிடம் விளக்கம் கேட்கிறர்

புதுடில்லி, செப். 21

கடாங்காவில் ஐ. நா. நடவடிக்கை சம்பந்தமாக பிரிட்டனின் நிலையை இந்தியா கண்டித்து வெளியிட்டகருத்துபற்றி விளக்கம் கேட்பதற்காக இந்தியாவிலுள்ள பிரிட்டிஷ் ஹைகமிஷனர் இன்று இந்திய வெளி விவகார இலாகாவுக்குச் சென்றிருந்தார்.

சென்ற நான்கு தினங்களில் இன்று இரண்டாவது தடவையாக பிரிட்டிஷ் ஹைகமிஷனர் இந்திய சாம்ராஜ்ய உறவு அதிகாரியான திரு. வை. டி. கண்டேவியாவைச் சந்தித்துப் பேசினர்.

## ஹமர்ஷீல்ட் மரணம் பற்றி பூரண விசாரணை தேவை

### ஐ. நா. சபையில் வற்புறுத்தல்

### பல நாடுகளும் அஞ்சலி

நியூயோர்க், செப். 21

"ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்ட் விபத்தில் உயிரிழந்திருந்தால் அது ஒரு சர்வதேச கோரமான துயரம் நிறைந்த ஒரு சம்பவமாகும். அவர் வேறு காரணங்களினுல் உயிர் துறக்க கேர்ந்திருந்தால் அது ஒரு சர்வதேச குற்றமாகும்" என்று இந்திய பாதுகாப்பு மந்திரியும் ஐ. நா. பொதுச்சபையில் இந்திய கோஷ்டியின் தலைவருமான திரு. வி. கே. கிருஷ்ணமேனன் நேற்று ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

ஐ. நா. பொதுச் சபையின் இந்த வருடத்துக்கான தலைவராக டுனிஷியப் பிரதிநிதி திரு. மொங்கிஸ்லிம் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் மறைந்த பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டுக்கு அங்கத்தினர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்திய தலைமைப் பிரதிநிதி திரு. மேனன் மேலும் பேசுகையில் "காலஞ் சென்ற திரு. ஹமர்ஷீல்டுக்கு நாம் செலுத்தக் கூடிய சிறந்த அஞ்சலி, காங்கோவில் பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதுதான்" என்ருர்.

(5ம் பக்கம் பார்க்க)

## மலைநாட்டில் குருடர் செவிடர் பாடசாலை

### புதியகட்டடத்தை பிரதமர்திறந்துவைத்தார்

பலாங்கொடை, வியாழன்

"இலங்கையில் வலது குறைந்த பிள்ளைகளான செவிடர், குருடர்களுக்கு வாழ்வளிக்க எடுக்கப்படும் சகல முயற்சிகளுக்கும் இலங்கை அரசாங்கம் உதவியளிக்கத் தயாராக இருக்கிறது" என்று பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

பலாங்கொடையிலுள்ள மிரிஸ்வத்தை என்ற இடத்திலுள்ள யசோதரை குருடர், செவிடர் பாடசாலையின் புதிய கட்டிடத்தை பிரதமர் சிறிமா நேற்றுதிறந்து வைத்துப் பேசுகையிலேயே மேற்கண்டவறு கூறினர்.

குருடர், செவிடர் பாடசாலை மலைநாட்டில் ஒன்றேயொன்று தானிருக்கிறதென்றும் இப்பாடசாலையின் சேவை தமக்கு அதிக மகிழ்ச்சியளிக்கிறதென்றும் கூறினர்.

### கூட்டுறவும் கடை திறப்பும்

பலாங்கொடையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தா

(5ம் பக்கம் பார்க்க)





## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்கள் அடங்கிய கற்றலோக் (Catalogue) இனம்.

வைத்தியர் பரிபூரணாநந்தர், கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

## ஆயுள்வேத அரிய சாதனை

புற்று நோய்க்கு 'யோகீஸ்வர ரசம்' தமிழ்வைத்தியமுறைப்படி புற்று நோயை வேரறுக்க முடியுமென்பதை செயல்மூலம் நிருபிக்கப்பட்டுள்ளது. மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டோர் எம்மிடம் சிகிச்சை பெற்றுக் குணமடைநதுளர். தாய்க்குலத்தாருக்கு ஒரு வரப்பிரசாதமாக கிடைத்துள்ள அரிய மருந்து பெரும்பாடு நிவாரணி." தாமதமின்றிக் கலந்தாலோசியுங்கள்.

பொ. செல்லையா
ஆயுள்வேத வைத்தியர்,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

## தேவை

நல்ல அனுபவமுள்ள 'சிலிண்டர்' மெஷின் வேலை தெரிந்த ஒருவர் தேவை-ஈழநாடு லிமிட்டெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

நல்ல அனுபவமுள்ள கலர் அச்சுவேலைகள் செய்யக்கூடிய 'பிளேட்டின்' மெஷின் வேலை தெரிந்தவர் ஒருவர் தேவை: ஈழநாடு லிமிடெட், த. பெ. எண் 49, யாழ்ப்பாணம்.

## வியாபாரம்பெருக விளம்பரம்செய்க

## நரையும் 'நைலோனும்'

(6ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தது. நரைக் கிழவி ஏன் "ஹேர் நெட்" மாட்டிக்கொண்டாள் என்று மனதுக்குள் திட்டிக்கொண்டேன். ஆனால் கணவரின் விகடப் பேச்சுக்கு விட்டுக் கொடுக்காமல் நானும் விகடம் கேட்டேன். 'ஆமாம். கிழவியின் கொண்டையை நீங்கள் ஏன் பார்க்கவேண்டும்' என்றேன். அதுவா பஸ் நிலையத்தில் கியூவில் நின்றுளே கிழவி எனக்கு முன்னுக்கு கண்ணுக்குத் தெரிந்தது பார்த்தேன். காரணம் தெரியவில்லை. உன்னிடம் கேட்டால் "ஓகோ காரணமா? 'ஹேர் நெட்' போடுவது நலை மயிர் பறக்காமல்" என்றேன். அப்படியானால் நீயும் கிழவியாகும்போது 'ஹேர் நெட்' மாட்டிக் கொள்வாயா? அப்புறம் பாருங்களேன் என்றேன். ஆமாம் அப்போ வேறு எந்த நெட்டெல்லாம் வருகிறதோ, நான் இப்போ மாட்டுவது தெரியாதா என்றேன். 'அப்ப'டியா? ஆமாம் அது கண்ணுக்குத் தெரியாத 'நைலோன் நெட்' கிழவி மாட்டிய மீன் வலையல்ல. என்றேன்.

## மாணவர் பேச்சுப் போட்டி முடிவுகள்

பருத்துத்துறை, வியாழன் வடமராட்சி ஆசிரியர் சங்கத்தினால் வடமராட்சிப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட பேச்சுப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவர் விபரம் வருமாறு;-

### பேச்சுப்போட்டி

#### ஆங்கிலம்

மேற்பிரிவு ஆண்கள்:(1) என். செல்லையா.

மத்தியபிரிவு ஆண் கள் 1. சி. பாலசுப்பிரமணியம், 2. பாலகிருஷ்ணன், 3. வி.விவேகாநந்தம்.

கீழ்ப்பிரிவு ஆண்கள்: 1. ஏ. ஆர். ஸ்ரீதரன், 2. ஏ, ஜெகநாதன், 3. எஸ். சிவசுப்பிரமணியம்.

மேற்பிரிவு பெண்கள்: 1. கே. பத்மாலோஜினி, 2. எஸ் தேவிகராணி.

மத்தியபிரிவு பெண்கள்: 1. டி. லலிதா, 2. நீலாம்பிகை, 3. கே. பொன்றஞ்சினி.

கீழ்ப்பிரிவு பெண்கள்: 1. ஏ. விலானி, 2. எஸ். உருத்திராம்பிகை, 3. வி. ஜெயமங்களவரி

### பேச்சுப்போட்டி

#### தமிழ்

மேற்பிரிவு ஆண்கள்: 1. எஸ். யோகரத்தினம், 2. ஏ. பாஸ்கரதாஸ், 3. எம். கணேசலிங்கம்.

மத்தியபிரிவு ஆண்கள்: 1. என். விவேகானந்தன், 2 எஸ். குணேந்திரராஜா, 3, கே. லோகநேசன், கே. சற்குணராஜா.

கீழ்ப்பிரிவு ஆண்கள்: 1. எம். சாந்தகலாதன், 2. வி. பரமசிகாமணி, 3. டி. பாலகங்காதரன்.

மேற்பிரிவு பெண்கள்: 1: வி. நீலாம்பிகை, 2. ஆர். தர்மேஸ்வரி, 3. ஆர் நவமணி.

மத்தியபிரிவு பெண்கள்: 1. கே. பிரேமாவதி, 2. ஆர். தேவமனோஹரி, 3. கே. விஜயலட்சுமி.

கீழ்ப்பிரிவுபெண்கள்: 1. எஸ். விஜயலட்சுமி, 2. டி. நீலாம்பிகை, 3. பி. சரஸ்வதி, வி. மல்லிகாதேவி.

## வழக்குகளை பிரசுரிக்க தடை

கோலாலம்பூர்

பொதுமக்களின் தார்மீக நலன்களைக் குலைக்கும் விதமாக வழக்குகள் பற்றிய விவரங்களைப் பத்திரிகைகள்வெளியிடுவதைத் தடுக்க கூட்டரசு சர்க்கார் ஒரு மசோதாவை வெளியிட்டது.

சிறுவர்களின் விவகாரங்கள், உணர்ச்சியைத் தூண்டும்முறையிலான வைத்திய, சிசிச்சை, பிரசுர விவரங்கள், விவாகரத்து, கணவன்-மனைவி உறவுகள், குடும்பத்தகராறு போன்றவை சம்பந்தமான வழக்குகளில் "அனுவசிய" விவரங்களைப் பிரசுரிக்க மசோதா தடைவிதிக்கிறது.

இந்தத் தடையை மீறுபவர்களுக்கு நான்குமாத சிறைவாசமோ அல்லது ஆயிரம் வெள்ளி அபராதமோ (இரண்டுமோ) விதிக்கப்படலாம்.

### மாநகர சபையில்

# தமிழ் மொழி நிர்வாகம்

## மேயருக்கு ஆணையாளர் யோசனை

யாழ்ப்பாணம். வியாழன்

யாழ்ப்பாண மாநகரசபையின்நிர்வாகத்தைதமிழில் நடத்துவதற்கான சிலயோசனைகளை ஆணையாளர் திரு. ஏ. வி. சின்னையா மேயரிடம் சமர்ப்பித்துள்ளார் எனத்தெரிகிறது. இந்த அறிக்கையைச் சபையின் கவனத்துக்குக் கொண்டுவருமாறும் அவர் கேட்டுள்ளாராம்.

மாநகரசபை நிர்வாகம் நூற்றுக்கு நூறு தமிழ் மொழியிலேயே நடைபெறவேண்டும் என்று தான் முயற்சி எடுப்பதாகவும் அதேபோல மாநகர சபையும் பலமுறைகளில் நூற்றுக்கு நூறு தமிழ் மொழியிலேயே நிர்வாகம் அனைத்தும் நடைபெறவேண்டும் என்று தீர்மானங்கள் நிறைவேற்றியுள்ளதாகவும் இந்த முயற்சியில் உத்தியோகத்தர்களுக்கு எவ்வளவு சங்கடங்கள் உண்டு என்பதை அத்துடன் இணைக்கப்பட்டிருக்கும் கடிதக்கோர்வைகள் நன்கு புலப்படுத்தும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

சென்ற மராமத்துக்குழுவில் நாம் எவ்வளவோ பிரயாசையெடுத்து கூடியவரையில் நூற்றுக்கு நூறு தமிழ் மொழியிலேயே நிகழ்ச்சி நிரலைச் சமர்ப்பித்தும் அக்குழுவின் முதல் நிகழ்ச்சியிலேயே கொழும்பில் இருந்து வந்தகடிதம் ஒன்றைத் தமிழ்மொழியில் வைக்கவில்லையென்ற காரணத்தால் பலத்த வாக்குவதங்களுக்கிடையில் கண்டிக்கப்பட்டதாகவும் அடுத்தநாள் நடைபெற்ற மின்சாரக் குழுவின் கூட்டத்திற்கு எவ்வளவோ முயற்சி எடுத்து முழுக்கத் தமிழ்மொழியில் நிகழ்ச்சிநிரலைத் தயாரித்திருந்தும் இக்குழு ஆங்கில மொழியிலேயே நடைபெற்றதுடன் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் அக்குழுவில் தனது அறிக்கையை ஆங்கிலத்தில் கொடுப்பதற்கு மனப்பூர்வமாகக் குழு இடமளித்ததாகவும் அதில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இத்தகையநிலைகளால் தமிழ் மொழி நிர்வாகத்தை எவ்வாறு நடாத்த நடவடிக்கைகள் எடுக்கவேண்டும் என்பது தெரியாது தடுமாறவேண்டியிருப்பதாகவும் தெரிவித்துள்ளாராம்.

மாநகரசபைக் கணக்காளர் பகுதியில்கணக்குப்பரிசோதனைமா அதிகாரியினுடையவும், உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுமின்றித் தமிழ்மொழியில் நிர்வாகத்தை நடாத்த முடியாதென்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

தமிழ்மொழி நிர்வாகத்தை நடாத்த சில உடன்கவனிக்க வேண்டிய உதவிகளையும் அதில் காட்டியிருக்கிறுரெனத் தெரிகிறது.

## ஜெட் போர் விமானங்கள்

### சுவீடனும் அனுப்புகிறது

ஸ்டாக்ஹோம், செப். 21

கடாங்காவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு உதவிபுரிவதற்கென நான்கு 'ஜெட்' போர் விமானங்களை அனுப்புவதென்று சுவீடன் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

'ஜெட்' விமானங்களை அனுப்பியுதவும்படி கடாங்காவிலுள்ள ஐ. நா. அதிகாரிகள் உலகநாடுகளுக்கு விடுத்த வேண்டுகோளுக்கிணங்க சுவீடன் மந்திரிசபை நேற்று அவசரமாகக்கூடி ஆலோசனை செய்தபின் நான்கு 'ஜெட்' விமானங்களை அனுப்புவதென முடிவுசெய்தது. சுவீடன் தான் காலஞ்சென்ற திரு. ஹமர்ஷீல்டின் தாயகம் என்பது குறிப்பிடத்தக்கது.

ஐ. நா. படைக்கு எதியோப்பியாவும் நான்கு ஜெட் விமானங்களை அனுப்பியுள்ளது.

## 'விஞ்ஞானப் பட்டதாரிகள் பெரிய பதவிகளையே விரும்புகிறுர்கள்'

### –நிவித்திகல எம். பி.

இரத்தினபுரி, வியாழன்

நாட்டில் ஜனத் தொகை பெருகிக் கொண்டு போகப் போக பதிய பள்ளிக்கூடங்களையும் நிறுவ வேண்டியே இருக்கிறதெனக் கல்வி அமைச்சின் பார்லிமெண்ட் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்ன கூறினுர். இரத்தினபுரி பத்துஹேன மகா வித்யாலயத் திறப்பு விழாவின் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

இரத்தினபுரி எம். பி. திரு. டி. ஆர். பி. வீரசேகரா தமது பேச்சிற் குறிப்பிட்டதாவது:

"சடந்த கால அரசாங்கத்தின் யோசனையற்ற கொள்கைகளாலேயே இன்று உணவுப் பொருள்களின் விலை அதிகமாகி இருக்கிறது. இப்போதைய அரசாங்கம் அபிவிருத்தியை விரும்புகிறது. எதிர்கால சந்ததியினரது நல்ல வாழ்விற்காக இன்று மக்கள் சில தியாகங்களைச் செய்ய வேண்டும்".

நிவித்திகல எம். பி. திரு. ஸ்ரான்லி மொலிகொட பேசுகையில் ஆக்க வேலைகளில் ஈடுபடக் கூடிய விஞ்ஞானத் துறைப் பட்டதாரிகள் பல்கலைக்கழகத்திலிருந்து வருவதில்லை. விஞ்ஞானப் பட்டதாரிகள் சிவில் சேர்விஸ் பதவிகளையும் அதிக சீதனத்தையும், முதலாம் வகுப்புப் பிரயாணத்தையுமே விரும்புகிறுகள். விஞ்ஞான அறிவைக் கொண்டு ஆக்க வேலைகளில் அவர்கள் ஊக்கம் காட்டுவதில்லை".

## தொழிலாளர் வெளியேற்றப்பட்டனர்

கொழும்பு, வியாழன்

கல்லோயா இடதுகரையில் கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட 200 வீடுகளைச் சென்ற திங்கட்கிழமை கல்லோயாத் தொழிலாளர் சிலர் வலோற்காரமாக உள்ளிட்டுத் தங்கிக்கொண்டார்கள். தொடர்ந்து அத் தொழிலாளர்கள் வெளியேற்றப்பட்டதாயும் அப்பகுதிகளை இப்போது பொலிசார் காவல் செய்துவருவதாகவும் தெரிகிறது.

## ஹமர்ஷீல்ட் கொலையுண்டாரா?

### ஆபிரிக்கத் தலைவர் சந்தேகம்

நைரோபி, செப். 21

"திரு. ஹமர்ஷீல்ட்விபத்தில் தான் உயிரிழந்தாரா என்பதில் தமக்கு சந்தேகமேற்பட்டுள்ளது" என்று கென்யா ஆபிரிக்கத்தலைவர் திரு. டொம்போயா இன்று கூறினுர்.

புதுடில்லிக்கு விஜயம் செய்துவிட்டு இன்று நைரோபி திரும்பிய திரு. டொம்போயா திரு. ஹமர்ஷீல்ட் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்றே தோன்றுவதாகத் தெரிவித்தார்.

திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்குக் காரணமாகவிருந்த விமானவிபத்துபற்றிவிசாரணை நடத்துவதற்கு வடக்குறொடீஷிய அரசாங்கம் நியமித்த விசாரணைக்கமிட்டியும் தனக்கு சந்தேகத்தைக் கொடுத்துள்ளதென்று அவர் சொன்னுர்.


10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொலர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
DOLLAR BRAND

பவுண் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது

டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!

டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்

உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது !

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்

டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:

அலுமினியம் இன்டஸ்றீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.

J. D. 3

# கடாங்காவில் சண்டை நிறுத்த உடன்பாடு

## கோலாலம்பூரிலுள்ள தமிழ்ப் பாடசாலை

### மூடும்யோசனைக்கு எதிர்ப்பு; ஆதரவளிக்க முடிவு

கோலாலம்பூர்,

**தமிழ்க் கல்விக்கும், கலாசாரத்திற்கும் வழிகாட்டியாக 50 ஆண்டுகளுக்கு மேலாக இருந்து வரும் செந்தூல் தம்புசாமிபிள்ளைத் தமிழ்ப் பாடசாலை, தொடர்ந்து என்றும் நீடிக்கத் தாங்கள் அதன் நிர்வாகக் கமிட்டிக்கு பூரண ஒத்துழைப்பை நல்குவதாகப் பாடசாலை மாணவர்களின் பெற்றோர்கள் உறுதி கூறினர்.**

நல்ல காற்றோட்ட வசதியையும், விஸ்தாரமான இடத்தையும் கொண்ட அப்பள்ளி மண்டபத்தில் நேற்று நடந்த பெற்றோர்கள் கூட்டத்தில் நூற்றுக்கும் அதிகமானவர்கள் பாடசாலை தொடர்ந்து நீடிக்க வேண்டுமென தங்களுடைய ஏகோபித்த குரலை எழுப்பினர்.

பாடசாலை மூடப்பட இருப்பதுபற்றி பத்திரிகைகளில் வெளியான செய்தி குறித்து மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்றோர்களும் அதிர்ச்சியடைந்ததாகக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய திரு. ஆ. ஜோஸப் கூறினார்.

தம்புசாமிப் பிள்ளை தமிழ்ப் பள்ளி சரித்திரப் பூர்வமானதென்றும், செந்தூல் பகுதியில் வாழும் அநேக தமிழருக்கு அது தமிழையும், தமிழ்க் கலாச்சாரத்தையும் பயிற்றுவித்ததாகவும் அவர் கூறினார்.

பெற்றோருக்கு வேண்டியது பள்ளிக்கூடம் இயங்குதலே என்றும், முனிசிபல் கல்வி அதிகாரியின் கண்களுக்கு அது மாட்டுக்கொட்டகை போல் காட்சியளிப்பதால் அதனை விரைவில் புதுப்பிக்கலாம் என்றும் திரு. ஜோஸப் கூறினார்.

இதர மொழிகளையும் கலாச்சாரத்தையும் பாதுகாப்போமென உறிதி கூறிய அரசாங்கத்தின் ஆட்சியில் தமிழப் பள்ளிகள் மறைந்துவருவது குறித்து அடுத்து பேசிய திரு ஈ. முருகேசு வருத்தம் தெரிவித்தார்.

தம்புசாமிப்பிள்ளைத் தமிழ்ப் பள்ளி 50 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்டதென்றும் அது அக்கால சிற்பியின் திட்டமென்றும் முனிசிப்பல் கல்வி அதிகாரி அதனை மாட்டுக்கொட்டகை என வர்ணித்திருப்பது நகைப்புக்கிடமானதென்றும் கூட்டத்தினரின் நகைப்புக்கிடையே கூறினார் திரு. ஈ. முருகேசு.

முனிசிபல் கல்வி ஸ்தாபனத்தில் வேலை பார்க்கும் அதிகாரிகள் அரசாங்க ஆங்கிலப்பள்ளிகளிலிருந்து வந்தவர்கள் ஆகையால் அவர்களின் கண்களுக்குத் தமிழ்ப் பள்ளிகளின் தோற்றம் எடுப்பாக இருக்காது எனவும் குறிப்பிட்டார் திரு. ஆறுமுகம்.

## ஐ. நா வில் நல்லடக்கம்!

நியுயோர்க், செப். 21

ஐ. நா. வின் சேவையில் உயிரைப் பலிகொடுத்த ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் பூதவுடல் ஐ. நா. தலைமைக் காரியாலயத்தில் நதிக் கரையில் நல்லடக்கம் செய்யப்பட வேண்டுமென்று ஐ. நா. வில் அமெரிக்காவின்பிரதிநிதியான திரு. அட்லாய் ஸ்டீவன்சன் நேற்று ஐ. நா. பொதுச் சபைக் கூட்டத்தில் யோசனை கூறினார்.

## குடும்பங்கள் வெளியேற்றம்

லண்டன், செப். 21

கிழக்கு பெர்லினிலிருந்து மேற்கு பெர்லினுக்கு தப்பிச் செல்வதற்கு காரணமாக இருப்பதாகக் கருதப்பட்ட மேற்கு பெர்லின் எல்லையோரமாகவுள்ள பல குடும்பங்களை கிழக்கு ஜெர்மன் அதிகாரிகள் இன்று அங்கிருந்து வெளியேற்றினர். பல குடும்பங்கள் கண்ணீருடன் சென்றதாகக் கூறப்படுகிறது.

## அதிகாரம் வழங்கப்பட்டது

லண்டன், செப். 21

கிழக்கு ஜெர்மன் மீது எவ்வித தாக்குதலும் நடைபெறக்கூடிய சாத்தியம் ஏற்படுமானால் எவ்வித அவசர நடவடிக்கையும் எடுப்பதற்குரிய அதிகாரமும் கிழக்கு ஜெர்மன் அதிபர் ஊல்பிரயத்துக்கு கொடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஸ்பாக் திரும்பினார்

லண்டன், செப். 21

சோவியத்பிரதமருடன் தாம் நடத்திய பேச்சுவார்த்தை பலனுள்ளதாக இருந்ததென்று இன்று தாயகம் திரும்பிய பெல்ஜியம் வெளி விவகார மந்திரி திரு. ஸ்பாக் கூறினார். சில விஷயங்களில் திரு. குருஷ்சேவ் விட்டுக்கொடுத்துப் பேசினாரென்றும் மற்றும் சில விஷயங்களில் உறுதியாக இருந்தாரென்றும் திரு. ஸ்பாக் தெரிவித்தார்.

திரு. ஸ்பாக் தனது பேச்சுவார்த்தைகள் பற்றி தமது அரசாங்கத்துக்குத் தெரிவித்தபின் பாரிசுக்குச் சென்று 'நேட்டோ' அதிகாரிகளுக்குக் கூறுவாரெனத் தெரிகிறது.

## ஷோம்பே-கியாரி சந்திப்பின் பயன்

### படைகள் நடமாட்டம் நிறுத்தப்பட்டது

அன்டோலா, செப். 21

**கடாங்காவில் சண்டையை நிறுத்துவதற்கான தற்காலிக உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில் கடாங்கா அதிபர் ஷோம்பேயும் காங்கோவிலுள்ள ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரியும் கையொப்பமிட்டுள்ளனர்.**

இத்தகவலை திரு. ஷோம்பே அன்டோலா விமானநிலையத்தில் பத்திரிகை நிருபர்களிடம் அறிவித்தார்.

சண்டைநிறுத்த உடன்பாடு ஏற்பட்டதுபற்றி இதுவரை ஐ. நா. தரப்பில் ஊர்ஜிதம் செய்யப்படவில்லை.

இந்த உடன்பாடு நேற்று நள்ளிரவு கழிந்த ஒரு நிமிடத்தின் பின் அமுலுக்குவந்ததாக திரு. ஷோம்பே கூறினார்.

இந்த உடன்படிக்கையிலுள்ள ஷரத்துக்கள் சில வருமாறு:-

இருதரப்பிலும் கைதானவர்கள் திருப்பிக் கொடுக்கப்பட வேண்டும். படைகள், ஆயுதங்கள், வெடிமருந்துகள் நடமாட்டம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும். கடாங்காவிலுள்ள ஐ. நா. துருப்புக்கள் தத்தம் முகாம்களுக்குத்திரும்பிவிடவேண்டும்.

உடன்படிக்கையிலுள்ள ஷரத்துக்களை நிறைவேற்ற நான்கு பேர் கொண்ட கமிஷன் ஒன்று நியமிக்கப்படுமென்றும் திரு. ஷோம்பே தெரிவித்தார்.

இந்த உடன்படிக்கையிலுள்ள ஷரத்துக்கள நியூயோர்க்கிலுள்ள ஐ. நா. தலைமைக் காரியாலயத்துக்கு அங்கீகாரத்துக்காக அனுப்பப்படவேண்டுமென்று ஐ. நா. பிரதிநிதி திரு. கியாரி தம்மிடம் தெரிவித்ததாக திரு. ஷோம்பே கூறினார்.

**எலிஸபெத்வில்லி ஐ. நா. கட்டுப்பாட்டில்**

கடாங்காவின் தலைநகரான எலிஸபெத்வில்லியில் ஜனங்கள் அதிகமாக வசிக்கும் பகுதியிலிருந்து ஐ. நா. துருப்புக்கள் தங்கள் முகாம்களுக்குத் திரும்பிவிட்டபோதிலும் எலிஸபெத்வில்லி நகரம் இன்னும் ஐ. நா படையின் கட்டுப்பாட்டிலேயே இருக்கிறதென்று லியப்போல்ட்வில்லியிலுள்ள ஐ. நா. அதிகாரியொருவர் தெரிவித்தார்.

காமினபடைத் தளத்தையும் கடாங்கா துருப்புகளிடமிருந்து மீண்டும் ஐ. நா. துருப்புக்கள் மீட்டுக்கொண்டதாக அந்த அதிகாரி கூறினார்.

**13 பேர் இறந்தனர் 63 பேர் காயம்**

கடாங்கா படைகளுக்கும் ஐ. நா. படைகளுக்கும் கடாங்காவில் இதுவரை ஏற்பட்டமோதலில் ஐ. நா. படையைச்சேர்ந்த 13 பேர் மாண்டனரென்றும் 63 பேர் காயமடைந்தனரென்றும் ஐ. நா. அதிகாரியொருவர் தெரிவித்தார். மாண்டவர்களில் 7 பேர் இந்திய வீரர்கள். காயமடைந்தவர்களில் 39 பேர் இந்திய வீரர்கள் என்றும் அந்த அதிகாரிகூறினார்.

## நோபல் சமாதானப் பரிசு!

நியுயோர்க், செப். 21

உலக சமாதானத்துக்காகவே உழைத்து அதற்காக உயிரைக்கொடுத்த திரு. ஹமர்ஷீல்டுக்கு சமாதானத்துக்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டுமென்று ஐ. நா. பொதுச் சபையின் நேற்றைய கூட்டத்தில் பர்மியப் பிரதிநிதி யோசனை கூறினார். சமாதானப் பரிசு கொடுக்கவேண்டுமென்று சென்னையில் ராஜாஜியும் சிபார்சு செய்துள்ளார்.

## 14-வது குண்டும் பரிசோதனை

வாஷிங்டன், செப். 21

சோவியத் யூனியன் மற்றொரு அணுகுண்டை நேற்று பரீட்சித்துள்ளதாக அமெரிக்க அணுசக்திக் கமிஷன் அறிவித்தது. இம்மாதம் முதல் திகதியிலிருந்து இதுவரை 14 குண்டுகளை ரஷ்யா பரீட்சித்துள்ளது.

## 1000 ஆசிரியர்களுக்கு தலைமை ஆசிரியர்பதவி

கொழும்பு, வியாழன்

சுமார் 1000 ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவியளிப்பதற்குக் கல்வி இலாகா நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. முதல்தரப் பள்ளிக்கூடங்களிலுள்ள 400 ஆசிரியர்களுக்கும் இரண்டாம் தரப் பள்ளிக் கூடங்களில் உள்ள ஆசிரியர்கள் 600 பேர்களுக்கும் இப்பதவி உயர்வு வழங்கக் கல்விப் பகுதி திட்டமிட்டுள்ளது.

தலைமையாசிரியரபதவி பெறப்போகும் ஆசிரியர்கள் கல்விப் பகுதியினால் பதவி உயர்வு பற்றி அறிவிக்கப்படுவர். தலைமையாசிரியர்களாகக் கடமையாற்ற விரும்பாத ஆசிரியர் எவரும்பதவி உயர்வை இழக்க நேரிடும் என கல்விப் பகுதி அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தலைமையாசிரியர்களுக்குரிய சம்பளத்தைப் பெறும் உதவி ஆசிரியர்களாகக் கடமையாற்றும் 200 ஆசிரியர்கள் இலங்கையிலுள்ள சுயபாஷைப் பள்ளிக்கூடங்களில் இருந்துவருகிறார்கள்.

## உலகிலேயே சிறந்த மிருகக்காட்சிச்சாலை

### மலாயாவில் உருவாகிறது

கோலாலம்பூர்,

மலாயா கூட்டரசில் நிறுவப்படவிருக்கும் மிருகக்காட்சிசாலை உலகிலேயேஒப்பற்றதாக விளங்கும் என சர்வதேச விலங்கியல் திட்ட நிபுணர் மேஜர் ஒப்ரிவெயிமன் கூறினார்.

கோலாலம்பூரிலிருந்து 7 மைல் தொலைவில் உலுகிள்ளானில் தேசிய மிருகக்காட்சிசாலையும், பூங்தோட்டமும் நிறுவப்படும்.

இதற்கான நிர்மாணிப்பு வேலைகள் அடுத்த ஆண்டு மார்ச்மாதம் முதல் தேதியன்று துவங்கும். 12 மாதங்களில் மிருகக்காட்சிசாலையின் ஒரு பகுதி பார்வையாளர்களுக்குத் திறந்துவிடப்படும்.

பூர்வாங்க சர்வே ஒன்றை நடத்துவதற்காக மேஜர் வெயிமன் சென்றவாரம் கோலாலம்பூர் வந்தார்.

ஐந்து ஆண்டுகளில் மிருகக்காட்சி நிலையம் நிறுவப்பட்டதும் அதில் 2,000 மிருகங்கள் இருக்கும் என்று அவர் தெரிவித்தார்.

100 ஏக்கர் காட்டுப்பகுதியுடன் 42 ஏக்கர் நிலத்தில் நிறுவப்படும் மிருகக்காட்சி நிலையம் இயற்கையான சூழ்நிலைகளுடன் சிறப்பாகக் காட்சியளிக்கும்.

பிராணிகள், ஊர்வன, பறப்பன, ஆகியவைகளுக்கும் மீன் வகைகளுக்கும் தனி இடம் ஒதுக்கப்படும்.

யானைகள், கடல் சிங்கங்கள் முதலியவற்றின் வேடிக்கை நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படும்.

டில்லி மிருகக்காட்சிச்சாலை நிர்மாணிப்புக்குத் திட்டம் வகுத்துத் தந்தவரான மேஜர் வெயிமன், மலாயா மிருகக்காட்சி முற்றிலும் நவீன முறையில் நிர்மாணிக்கப்படும் என்றார்.

## பிரிட்டிஷ் பார்லிமெண்ட்

லண்டன், செப். 21

பிரிட்டிஷ் பார்லிமெண்ட் கூட்டத்தை, இன்றுள்ள உலக நெருக்கடியை உத்தேசித்து அவசரமாகக்கூட்டும்படி பிரிட்டிஷ் எதிர்க்கட்சியினரின் தூது கோஷ்டியொன்று பிரதமரைக் கேட்டுக்கொண்டது. பிரிட்டிஷ் பார்லிமெண்ட் அக்டோபர் 24-ந் திகதி கூடவிருக்கிறது.

## இந்தியரின் சராசரி வயது 47

புதுடில்லி, செப். 21

இந்தியரின் சராசரி வயது முன்பு சுமார் 32 ஆக இருந்தது. இப்போது அது 47 ஆகியுள்ளது. இதை முக்கிய சாதனைகளிலொன்ருக காங்கிரஸ் தேர்தல் விஞ்ஞாபனம் எடுத்துக்காட்டுகிறது.

## தாராசிங்உயிரிழந்தால்மற்ருெருவர் உண்ணாவிரதமிருப்பார்

### சன்பத்தேசிங் அறிவிப்பு

புதுடில்லி, செப், 21

பஞ்சாபிசுபா கோரிக்கைக்காக உண்ணாவிரதமிருக்கும் அகாலிடால் இயக்கத்தலைவர் மாஸ்டர் தாராசிங் உண்ணாவிரதம் காரணமாக உயிர்நீத்தால் அகாலி இயக்கத்தினர் ஒருவர் பின் ஒருவராகத் தொடர்ந்து உண்ணாவிரதமிருப்பார்கள் என்று அகாலிடால் இயக்கத் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள சன்பத்தேசிங் தெரிவித்தார்.

சென்ற 37 தினங்களாக உண்ணாவிரதமிருந்துவரும் மாஸ்டர் தாராசிங்கின் உடல்நிலை மிக மோசமடைந்துள்ளதாகவும் அவரது எடையில் 31 இருத்தல் குறைந்துவிட்டதாகவும் அறிவிக்கப்படுகிறது.

கிழக்கு பஞ்சாப் சட்டசபைக் கூட்டத்தில் மாஸ்டர் தாராசிங்கின் உண்ணாவிரதத்தினல் தோன்றியுள்ள நிலைபற்றிவிவாதிக்கவேண்டுமென எதிர்க்கட்சியினர் சிலர் கூறிய யோசனையை ஏற்றுக்கொள்ள சபாநாயகர் மறுத்துவிட்டார். இதை ஆட்சேபித்து அகாலிடால் இயக்கத்தைச் சேர்ந்த ஐந்து அங்கத்தினர் வெளிநடப்புச்செய்தனர்.

### மணிவாக்கு

"பிறர் துன்பங் கண்டு இரங்குதல் மனித குணம். அதனை நீக்குதல் தெய்வ குணம்".


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 6 வ (22-9-61)

EEL NADU: National Tamil Da y Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.


## வர்த்தக கெடுபிடிகள்

புளி, கோப்பி, தீப்பெட்டி இவற்றைத் தவிர மற்ற சரக்குகளெல்லாம் கட்டுப்பாட்டு விலைக்கும் குறைவாகவே இப்போது கிடைப்பதாயும், அரசாங்க கட்டுப்பாடு கெடுபிடிகள் இல்லாவிட்டால், எல்லாச் சரக்குகளும் தாராளமாகவும் மலிவாகவும் மக்களுக்குக் கிடைக்குமென்றும் யாழ்ப்பாண வர்த்தகரொருவர் நமக்குத் தெரிவிக்கின்றார். இது உண்மையாயின் அரசாங்கம் நிலைமை குறித்துப் புனராலோசனை செய்து வீண் கெடுபிடிகளைத் தளர்த்த வேண்டும்.

யுத்த காலத்திலே தான் முதல் முதலாக கட்டுப்பாடுகள் ஏற்பட்டன. அரிசி, மாவு, முதலிய முக்கிய உணவுப் பொருள் இறக்குமதி யுத்தம் காரணமாக தடைபட்டதால் பொது மக்கள் பட்டினி கிடக்காமலும், கிடைக்கும் முக்கிய உணவுப் பொருள்களை சீராக எல்லா மக்களுக்கும் நியாயமான விலைக்குக் கிடைக்கச் செய்யவும் அரசாங்கம் அரிசி, மாவு, இந்த இறக்குமதிகளை ஏகபோகமாக ஏற்றது. கூட்டுறவு கூப்பன் கடைகள் மூலமும் தனிப்பட்ட வர்த்தகர் மூலமும் இவற்றை விநியோகித்து மக்களுக்கு மேலான சேவையைச் செய்து, பட்டினியால் இங்கு யாரும் சாகாமல் தடுத்தது.

யுத்தம் நின்று வர்த்தகம் தாராளமாக நடைபெற்றும், அரிசி, மாவு இவற்றை குறைந்த விலையில் சீராக விநியோகிக்கவும், வாழ்க்கைச் செலவு உயராமல் தடுக்கவும் அரசாங்கம் அந்த இறக்குமதி, விநியோக ஏகபோக உரிமையை நீடித்து தன்னிடமே வைத்துக்கொண்டுள்ளது. பல கோடி ரூபாய் இதில் நஷ்டம் ஏற்பட்டதால், சீனி இறக்குமதியையும் தனது பொறுப்பிலேயே வைத்துக்கொண்டு அதன் மூலம் கிடைக்கும் லாபத்தை, அரிசி நஷ்டத்துக்கு ஓரளவு ஈடு செய்கின்றது. ஆகவே இம் மூன்று உணவுப் பொருள் இறக்குமதி விநியோக உரிமை பற்றியும் சீனி நீங்கலாக, விலைக்கட்டுப்பாடுபற்றியும் குறை கூறுவதற்கில்லை. மக்களின் நன்மைக்கு இவை அவசியமே.

வர்த்தகர்களில் யாரும் சுயநலத்தாலும், பேராசையாலும் அதிக விலை வைத்து கொள்ளை லாபம் தட்டாமல் தடுக்க, கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தை அமைத்து, எல்லாவிதமான வர்த்தகத்தையும் நடத்த அரசாங்கம் ஒழுங்கு செய்ததும் பொது மக்களுக்கு நல்லதே. ஆனல் வர்த்தகம் என்பது கடல்போல் மிக விரிவானது. பல்லாயிரக் கணக்கான அனுபவஸ்தர்கள் இதைச் செய்து, மக்களுக்குத் தேவையான சாமான்களை விற்பனை செய்து, சமூகத்துக்கு ஒரு அத்தியாவசிய சேவையைச் செய்கின்றனர். வேலையில்லாக் கஷ்டம் இதனுல் ஓரளவு தீரவும் முடிகிறது. வர்த்தகரில் ஒரு சிலர் பேராசை பிடித்தவர்களாக இருக்கலாம். எல்லாரும் கொள்ளைக்காரரல்லர். ஆகவே, வர்த்தகர்களை திடீரென்று நீக்கி விட்டு கூ. மொ விற்பனை ஸ்தாபனத்தின் மூலம் இப்பெரும் பொறுப்பை நிறைவேற்ற முடியாது.

கடைகளில் எக்காரணம் பற்றியும் தட்டுப்பாடு ஏற்படும் சாமான்களை, கூ. மொ. விற்பனை ஸ்தாபன மூலம் விநியோகிக்க ஒழுங்கு செய்யலாம். இதற்கான எல்லா அதிகாரமும் வசதியும் அரசாங்கத்துக்கு உண்டு. ஆனல்வர்த்தகரை வீணுக இம்சைக்கு உள்ளாக்கி, கெடுபிடிகள் செய்வது, முடிவில் மக்களுக்குத்தான் தீங்காகும். நாட்டுப் புறங்களில் சில விலைக் கட்டுப்பாட்டு அதிகாரிகளாலும், சில விதானைமார்களாலும், சிறிய கடைக்காரர்களுக்கு பீதியும், இம்சையும் ஏற்பட்டுள்ளதாயும், சிறிய வர்த்தகர் அதிக திகிலுடன் வர்த்தகம் செய்ய வேண்டி இருப்பதாயும் பல புகார்கள் நமக்குக் கிடைக்கின்றன. சிறிய வர்த்தகர்களின் கஷ்டங்களை அறிந்து, அவர்களுக்குக் கூட்டுறவு ஸ்தாபனங்கள் மூலம் நியாயமான விலைக்கு சரக்குகள் கிடைக்கும் படி செய்வதால் அவர்கள் நிம்மதியாக வியாபாரம் செய்யவும் மக்களுக்கும் நியாயமான விலைக்கு சரக்குகள் கிடைக்கவும் முடியும். வீண் கட்டுப்பாடுகளும் கெடுபிடிகளும் தான் கள்ள மார்க்கெட்டுக்கும், கொள்ளை லாபத்துக்கும் மூலகாரணமென்பது பகிரங்க ரகசியம்

# பரமன் கருணையை எவரும் பெறலாம்

— சித்பவானந்தா —

**பினுங்கிலுள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண ஆச்சிரம மண்டபத்தில், திருப்பராய்த்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் தபோனவத்தலைவர் சுவாமி சித்பவானந்தா 'கடவுள் பக்தி' எனும் பொருள்பற்றி பேசினுர். அவர் தமது உரையில் கடவுள் அன்பனின் இலக்கணத்தையும், தன்மையையும் மேற்கோள்களுடன் விளக்கினுர். அவ்வுரையின் சுருக்கம் இங்கு வெளியாகியுள்ளது.**

பக்தன் எவ்வுயிரிடத்தும் வெறுப்புற மாட்டான். நட்பும் கருணையும் பூண்டொழுகுவான். அவன் 'யான், எனது' என்னும் செருக்கற்றிருப்பான். அவன் சுகதுக்கத்தை சமமாய்க் கொள்வான். பொறுமையுடையான். என்றும் களிப்புடையான். தன்னடக்கமுள்ளவன். கடவுள் உண்மையில், சைதன்னியத்தில் திடவுறுதிகொண்டவன். மனத்தையும், புத்தியையும் ஆண்டவனுக்கே ஈந்தவன். இத்தகைய யோகியான அன்பனே, கடவுளுக்கு இனியவனுவான்.

### கடவுளன்பு

மாணிக்கவாசகப் பெருமான் பக்தி வலையிற் (கடவுள்) படுவோன் காண்' என்று பாடியுள்ளார். நாம் அனைவரும் பக்தி அல்லது அன்பின் சொரூபமே. எவ்வுயிரும் அன்பின் வடிவம். இந்த அன்பைக் கடவுளிடம் திருப்பிவிட்டால் அது கடவுளன்பாய்ப் பரிணமிக்கும். பக்தி எளியது; அதை யாரும் சுலபமாய்ப் பெற்றுவிடலாம். பூமியிலிருந்து தாதுக்களை வெட்டி எடுத்து, அவற்றின் அழுக்கைப் போக்கி, தூய பொன்னுக்குவது போன்று, மனமாசுகளை அகற்றிவிடின் கடவுளன்பு பிரகாசிக்கும். அதுவே உண்மைக் கடவுள் பக்தி அன்பும், சிவமும் ஒன்றல்ல; இரண்டல்ல. உலக பந்தத்தில்கூட அன்பு சூழ்ந்திருக்கிறது. இந்தச் சாமானிய அன்பை, பேரன்பாக நாம் மாற்றியமைத்தால், அது கடவுள் பக்தியாகிறது. இந்தக் கடவுள் பக்திக்கு சமுதாய அந்தஸ்து தேவையில்லை அதை யார் வேண்டுமானுலும் கோபியர் கண்ணன் பால் காட்டிய அருளன்பைப் போன்று', பெறலாம்.

எவன் ஒருவன் களிப்பு, கலக்கம், அச்சத்தால் விளையும் ஆத்திரங்களினின்று விடுபட்டவனே அவனே ஆண்டவனுக்கு இனியவன். பக்தி வளர்ச்சியைப் பற்றி இவ்வாறு பகவத் கீதை கூறுகிறது.

### பரம்பொருள் விலாசம்

ஒன்றை ஆழ்ந்து வெறுக்கும் அன்பனிடத்தும் அன்புண்டு. ஒன்றில் அன்பில்லேல், வெறுப்புக் கொள்ள முடியாது. எவ்வுயிரிடத்தும் வெறுப்புக்கொள்ளாதிருக்கும் மனப்பான்மை கொள்ளவேண்டும்; அது நட்பாக மாறவேண்டும். உங்கள் நட்பில் கருணை மல்கி, தாயன்பைப் போன்று பிரதி பலனை எதிர்பாராது மிளிரவேண்டும். கடவுளைப் பிரார்த்தனை செய்யும்போது கூட வரம் கேட்கும் காமிய பிரார்த்தனை உதவாது. அன்பு வியாபாரமல்ல; பண்டம் மாற்றுதலல்ல. விளம்பரமின்றி பக்தி செய்யவேண்டும். மின்மினி, நட்சத்திரம், சந்திரன், சூரியன் - இவை ஒன்றினும் ஒன்று பிரகாசத்தில் சிறந்தவை; ஒன்றுக்கொன்று உயர்ந்தவை. சூரியனுக்கு நிகர் பரம்பொருள்.

### சம திருஷ்டி

துக்கம் வந்தால் கடவுளை நோகலாகாது. சுக துக்கத்தைச் சமமாய்ப் பாவிக்க வேண்டும். இராமன் அயோத்தியை நீங்கி காட்டுக்குச் சென்றபோதும், மீண்டும்வந்து அரசை ஏற்றபோதும் இன்ப துன்பத்தைச் சமநோக்கோடு ஏற்றுர். ஆத்மசாதனத்தில் சர்வசதா காலமும், தன்னடக்கத்தோடு, வைராக்கியத்தோடு நல் வாழ்க்கை வாழவேண்டும். அடக்கம் அமரருள் உய்விக்கும். பரம்பொருளை அடைவதே நமது வாழ்க்கையின் குறிக்கோளாக வேண்டும். உலக வாழ்வு, கடவுள் வாழ்க்கைக்குப் புறம்பானது அன்று. மனிதன் உயிர் வாழ்வது, உலகின் பொருட்டு இது பற்றியே மாணிக்கவாசகப் பெருந்தகை, பக்தியின் இலக்கணத்தைப் பாடும்போது,

'மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து
உன் விரையார் கழற்கு என்
கைதான் தலைவைத்துக் கண்ணீர்
ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி
சயசய போற்றி யென்னும்
கைதான் நெகிழ விடேன் உடை
உடையாய் என்னைக் கண்டு கொள்ளே'

—என்று ஆண்டவன் பால் இரண்டறக் கலந்து மனமுருகி பக்தி செய்ய வேண்டும்என்று வலியுறுத்துகிறுர்.

### நிறை வழிபாடு

கடவுளைத் தொழுது கண்ணீர் வடிக்க வேண்டும்-அருட் கண்ணீர் பெற்றோர் வணக்கம் கடவுள் வணக்கமாய் பரிணமிக்கும். குழந்தைகள் பெற்றோரைத் தொழுது, பின் இதர செயல்களில் ஈடுபடவேண்டும். பண்டைய இந்தியாவிலிருந்த இந்தப் பழக்கம் வரவர நசிந்து வருகிறது. மனம் வாக்கு காயத்தால் செய்யும் வழிபாடே நிறை வழிபாடு. மன வழுக்கு நீங்கினல் சித்தமலம் தானே எய்தும். எனவே நாம் பக்தியை வளர்த்துப் பரமனைப் பூவுலகில் கண்டு வாழ்ந்தால் மண்ணுலகில் பெருவாழ்வு வாழ்ந்தால், நாம் எடுத்தமானிடப் பிறவி பயன் பெறும்.

# தோட்டத் தொழிலாளர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு திட்டம்

மலாயாவில் தோட்டத் தொழிலாளர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் அக்கறைகொள்ளும்படி செய்வதற்கு ஒரு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் வெற்றிபெற்ருல் தேசிய ரீதியில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வகுக்கப் படலாமென கூட்டரசு குடும்பக் கட்டுப்பாடு சங்கங்களின் தலைவரான டாக்டர் எல். எஸ். சோதி கூறினர்.

பால்வெட்டுத் தொழிலாளர்களுக்கோ அல்லது அவரது மனைவிமாருக்கோ குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தைப்பற்றி விளக்குவது சுலபமல்ல என டாக்டர் சோதி கூறினர்.

தோட்டத்தொழிலாளருடன் சமார் 17 ஆண்டுகள் வசித்து வேலை பார்த்துள்ள ஒரு பெண்ணை இக்குறையைப் போக்க நியமித்துள்ளதாக அவர்குறிப்பிட்டார்.

—

கொழும்பு, வியாழன்

கண்டி நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்த இரண்டாம் இராஜசிங்காவின் மணிமுடி களவாடப்பட்டது சம்பந்தமாக, நூதனசாலைக் காவற்காரர்களாகிய டபிள்யு. எம். திஸநாயக்காவும், எச். எம். செனிவரத்னவும் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டுள்ளார்கள். கண்டி மாஜிஸ்டிரேட் முன்பும் இவர்கள் ஆஜர் செய்யப்படுவர்.

## குழந்தைகள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள்

சுன்னுகம், வியாழன்

"குழந்தைகள் தெய்வாம்சம் பொருந்தியவர்கள். பொய் களவு, கபடம் முதலிய அழுக்காறு எதுவுமற்றவர்கள். இத்தகைய பெருமை வாய்ந்த குழந்தைகளை நல்ல சூழலில் வளர்த்துப்பேணவேண்டியது அவசியம். இப்படி வளர்த்தால் அவர்கள் நாட்டிற்கும் தமக்கும் நற்பயனுடையவர்களாக இருப்பார்கள்"

இவ்வாறு கந்தரோடைச் சிறுவர் கழக இயல் இசைப் போட்டிகளுக்குத் தலைமை வகித்துப்பேசிய ஆசிரியர். வி. கந்தசாமி குறிப்பிட்டார். சிறுவர் கழகத்தை ஏற்படுத்திய கந்தரோடைச் சனசமூக நிலையத்தாரை அவர் பாராட்டினுர்.

பரிசு பெற்ருேர் விபரம்:-

பேச்சுப்போட்டி: 1. ச. சுந்தரேஸ்வரன், 2. ப. உதயமலர், 3. க. சுந்தரலிங்கம்.

பாட்டுப்போட்டி: 1. பொ. மோகனசுந்தரம், 2. ச. சரவணபவானந்தன், 3. சு.முருகையா.

அபிநயப் பாட்டுப் போட்டி 1. தி. ஜெயதேவி, பொ. கமலாதேவி. 2. ப. குணராணி, கி. தனலட்சுமி, 3. தி. வனிதா, க. கோமளேஸ்வரி.

## ஜயாறன் எழுதுவது

நேற்று தபாலில் "விபூதி" எனும் சிறு நூல் ஒன்று கிடைத்தது. மானிப்பாய் இந்துசமய விருத்திச் சங்கத்தின் வெளியீடு இது. எழுதியவர் குமரபுரம் திரு. மு. வைரமுத்து ஜே. பி. என்று அதில் குறிப்பிட்டிருந்தது. விலை போடவில்லை. இலவசமென்று நினைக்கின்றேன்.

மூன வயிரமுத்து என்பவரை உங்களுக்குத் தெரியுமோ? அரசாங்கத்திலே சாதாரண குமாஸ்தாவாக இருந்து, தமது திறமையாலே ஸிவில் அதிகாரியாக, உள்நாட்டு அமைச்சில் பலவருடம் பதவி வகித்து, மேலதிகாரிகளின் பாராட்டுதலைப் பெற்றவர். இந்து தர்ம ஸ்தாபன விசாரணைக் கமிஷனின் காரியதரிசியாக இருந்துபெரியதோர் அறிக்கை தயாரித்தார். சில வருடங்களுக்கு முன் ஓய்வு எடுத்த பின்பும் சம்பளக் கமிஷன், விவாகரத்துக் கமிஷன் முதலியவற்றில் தொண்டாற்றினுர்.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்ததும், இங்கு சும்மா இருக்கவில்லை. மாணவர்களுக்கு கைத்தொழில் பயிற்சி அளிக்க ஒரு உயர்தர ஸ்தாபனத்தை நிறுவி அதை நடத்திவருகின்ருர்.

இந்தப் பணிகளெல்லாம் கூட என்மனதைக்கவரவில்லை. அவர் மானிப்பாய் கோயிலில் கூட்டுப்பிரார்த்தனை இயக்கத்தை ஆரம்பித்து வெற்றிகரமாக நடத்திவருவதாயும் இந்த முன்மாதிரியைப்பார்த்து பல கோவில்களிலும் கூட்டுப் பிரார்த்தனைகள் நடந்துவருவதாயும் அறிந்ததும், அவர் மீது எனக்கிருந்த மதிப்பு வெகுவாக உயர்ந்தது.

முன்னர் கொழும்பு ஜிந்துப்பிட்டி கோவிலில் மாணிக்கவாசகர் பற்றி தொடர்ந்து அவர் பேசியிருப்பதைக் கேட்டிருக்கிறேன். பொருள் உணர்ந்து மனமுருகிப் பேசிய அப்பேச்சுக்கள் என் செவிகளில் இன்னும் ஒலிக்கின்றன. ஓய்வெடுத்த பின் ஓயாது பல வகையிலும் ஊருக்கு உழைத்து வருகின்ருர்

அரசாங்கத்திலிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு அவர் மேலானதோர் முன்மாதிரியாவார். அவரைப் பெற்ற மானிப்பாய் அதிர்ஷ்டம் செய்த ஓர் ஊர்.

* * *

கொழும்பிலிருந்து நேற்று கிடைத்த ஒரு பத்திரிகையில் செய்தியொன்று பார்த்தேன். இரு இளம் பெண்கள் அளுத்கடைக்கு நண்பரைப் பார்க்க வந்தனர். நண்பரைப் பார்த்த பின் தவறணைக்குச் சென்று நன்ருகக் குடித்துக் கூச்சல் போட ஆரம்பித்துவிட்டனர். ஒரு டாக்ஸியில் இரு பெண்களையும் ஏற்றிக்கொண்டு, அந்த நண்பர் ராஜகிரியாவுக்குச் சென்ருர்.

டாகஸிக்காரர் காசு கேட்டதும், அவரைக் கண்டபடி திட்டினர். இதற்கிடையே ஒரு பெண் பக்கத்திலிருந்த சாக்கடையில் விழுந்து விட்டாள். மற்றவள் அப்பெண்ணை வெளியில் எடுத்த பின், மீண்டும் ரோட்டிலே பஸ்ஸுக்கு முன்னல் விழுந்தாள். பஸ் நின்றது. உடன் இரு பெண்களும் பஸ்ஸில் ஏறினர். ஆனல் டிக்கெட் வாங்க மறுத்தனர்!

பஸ்ஸுக்குள்ளே இரு பெண்களும் பாடிக் கொண்டே டான்ஸ் ஆடினர்! அவர்களை வெளியேற்ற டிரைவர் எவ்வளவோ முயன்றும் பயனில்லை.

பிறகு பொரளை பொலிஸ் ஸ்டேஷனுக்கு பஸ்ஸைக் கொண்டு சென்று, பொலிஸிடம் பெண்களை ஒப்படைத்தார்!

இச் செய்தியைப் பார்த்ததும் எனக்கு மிக வெட்கமாக இருந்தது. அவர்கள் குடித்தது கசிப்பு அல்ல. தவறணைகளை

(5-ம்பக்கம் பார்க்க)

# சமூகமுன்னேற்ற வேலைகளில் ஈடுபடுத்த கட்டாய திட்டம்

## கல்வி இலாகா நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

ஆசிரியர்களும் 14 வயதுக்கு மேற்பட்ட பள்ளிக்கூட மாணவர்களும் சமூக முன்னேற்ற வேலைகளில் ஈடுபடுவதற்கான கட்டாய திட்டமொன்றை கல்வி இலாகா உருவாக்கியுள்ளது.

பள்ளிக்கூட காலங்களில் உள்ள சனிக்கிழமைகள் தேசிய சேவைக்கென ஒதுக்கப்படல் வேண்டும். 14 வயதுக்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் தேசிய சேவைகளில் பங்குபற்ற வேண்டும். உடற்சுகம் குறைந்த பிள்ளைகள் மீது மேற்படி நியதியை விலக்கப் பள்ளிக்கூட அதிபர்களுக்கு அதிகாரமுண்டு.

ஒவ்வொரு ஆசிரியரும் மாணவரும் ஒரு மாதத்தில் குறைந்த பட்சம் ஒரு சனிக்கிழமையாவது சமூகப் பணியில் ஈடுபடுத்தவேண்டும்.

பள்ளிக்கூடத்தில் உள்ள வேலைகள், பள்ளிக்கூடத்தைச் சுற்றியுள்ள இடங்களையும் பள்ளிக்கூடம் அமைந்துள்ள கிராமங்களிலுள்ள வேலைகள், பள்ளிக்கூடக் கிராமத்தைச் சுற்றியுள்ள கிராம வேலைகள் என மூன்று தினிசுகளாகச் சமூக சேவை வேலைகள் வகுக்கப் பட்டுள்ளன. பள்ளிக்கூடத்தைச் சுத்தஞ்செய்தல் முதல் தினிசு வேலையில் அடங்கும். பள்ளிக்கூடம் அமைந்துள்ள கிராமங்களின் தேவைகளுக்கேற்ப வேலைகளைச் செய்வது இரண்டாம் தினுசு சேவையாகும். மற்றைய சமூக சேவைத் தாபானங்களுடன் இணைந்து செய்யக்கூடிய சேவைகள் மூன்ரு' தினுச சேவையாகும்.

## முயற்சி பலிக்கவில்லை!

நாவலப்பிட்டி, வியாழன்

நாவலப்பிட்டி கொத்மலை வீதியில் திரு. எஸ். சபாரத்தினம் என்பவருக்குச் சொந்தமான நகை ஈடுபிடிக்கும்கடையொன்று திங்கட்கிழமை இரவு திருடர்களால் உடைக்கப்பட்டது. ஜன்னல் வழியாக கடைக்குள் புகுந்த திருடர், பெறுமதியான பொருள்கள் எதையும் திருட முடியாது திரும்பிவிட்டனர்.

நாவலப்பிட்டிப் பொலிசார் புலன்விசாரணைசெய்கின்றனர்.

## ஆசிரியர் நியமனத்துக்கு மாணவர் எதிர்ப்பு

பட்டிருப்பு, வியாழன்

கடந்த சில நாட்களாக கோவில்போறதீவு அரசினர் பாடசாலைக்குப் பிள்ளைகள் போவதில்லை. சில ஆசிரியர்களின் நியமனத்தை எதிர்க்கும் முகமாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது எனத்தெரிகிறது.

## மகாஜனக் கல்லூரி வெற்றி

மாவிட்டபுரம், வியாழன்

மகாஜனக் கல்லூரி இரண்டாம் பிரிவுக் கோஷ்டிக்கும், மாவிட்டபுரம் இளம் விவசாயிகள் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதை பந்தாட்டப் போட்டியில் மகாஜனக் கல்லூரி 7 கோல்களால் இளம் விவசாயிகள் கோஷ்டியைத் தோற்கடித்தது.

திரு. எஸ். பஞ்சரத்தினம் மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## மத்திய மாகாண விருத்தியில் அரசினர் சிரத்தை

ஹேவகத்த, வியாழன்

"வடமத்திய மாகாணம் மேல் மாகாணம் தென் மாகாணம் போலன்றி மலைநாட்டில் பள்ளிக்கூட வசதியும் பாதைகள் வசதியும் மிக முக்கியமாகக் கவனிக்கப்படல் வேண்டியவை." இவ்வாறு உணவு மந்தி திரு. டி. பி. இலங்கரத்ன கந்தாவல விற்பாலயப் புதுக் கட்டிட அத்திவாரக்கல் நாட்டு விழாவின் போது கூறினர். மலைநாட்டின் பாதைகளைத் திருத்த ரூ. 330,0000 வும் பள்ளிக்கூடங்களுக்கு ரூ. 140,0000 வும் அரசாங்கம் ஒதுக்கி வைத்திருக்கிறதென அவர் கூறினர்.

பொது மக்களின் பணம் பொது வேலைகளுக்குப் பயன்பட வேண்டும். அதனுல் வருகிற இலாபத்தையும் பொது மக்களே பகிர்ந்துகொள்ள வேண்டும். ஆகையால் அரசாங்கம் தனியாரிடம் ஒப்படைக்கும் வேலைகளை யெல்லாம் கூட்டுறவுச் சங்கங்கள் கண்ட்ராக்ட் எடுத்துச் செய்யலாம் எனவும் அவர் கூறினர்.

# எழுத்தாளரின் சுதந்திரம் பாதிக்கப்படலாகாது

## சாகித்திய விழாவில் கலாசாரத் தலைவர்

தெஹிவளை, வியாழன்

பிறருடைய கருத்துக்களுக்கு மதிப்புக் கொடுங்களென தெஹிவளை ஜனதா சங்கம் ஆதரவில் நடைபெற்ற சாகிஹித்ய வார முடிவு விழாவில் பேசிய நீதிமந்திரி திரு. சாம். பி. ஸி.ர்பர்ணண்டோ கேட்டுக் கொண்டார். அவர் மேலும் பேசியதாவது:- "சிங்களம் அரசாங்கமொழி யாகிவிட்டது. எனவே எல்லோரும் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பார்கள் என எதிர்பார்க்கிறேன்."

கலாச்சாரப்பகுதித் தலைவர் திரு. எம். ஜெ. பெரேரா பேசியதாவது: "இலக்கியப் படைப்புக்களைப் பரிசீலனை செய்ய ஒரு சபையை நியமிப்பது, எழுத்தாளரின் சுதந்திரத்தைப் பாதிப்பதாகும். இலக்கியத்தில் ஆபாசம் அறிவோடு சம்பந்தமான ஒரு பிரச்சினையாகும். ஒரு இலக்கியநூலை அதில் உள்ள சில வரிகளின் மூலம் மதிப்பிடுவது தவறு."

## மலைநாட்டில் குருடர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பனத்தின் சில்லறை விற்பனைக் கடையொன்றையும் பிரதமர் இன்று திறந்து வைத்தார். இதுபோன்ற சில்லறை விற்பனவுக் கடைகளினுல் மக்களுக்கு நல்ல பயன் கிடைக்குமென்றும் வாழ்க்கைச் செலவு குறையுமென்றும் பிரதமர் கூறினர்.

### வாழ்க்கைச் செலவு அதிகமில்லை

இதே வைபவத்தில் உணவு வர்த்தக அமைச்சர் திரு. டி. பி. இலங்கரத்னபேசுகையில் உணவுப் பொருள்கள் நியாயமான விலையில் மக்களுக்குக் கிடைக்கச் செய்வதற்காகவே கூட்டுறவு மொத்த விற்பனவு இலாகா பல இடங்களிலும் சில்லறை விற்பனைக் கடைகளை ஆரம்பித்து வருகின்றதென்ருர். இந்த முயற்சி வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதை குறைத்து விடுமென்று அவர் சொன்னர்.

"பல்வேறு நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வாழ்க்கைச் செலவு அதிகம் என்று கூற முடியாது" என்றும் அமைச்சர் இலங்கரத்ன கூறினர்.

# கல்லோயா சபையின் அடுத்த அம்சம்

## ரூ.10 லட்சம் செலவில் தண்ணீர் திட்டம்

கொழும்ப, வியாழன்

கல்லோயாசபையின் 1961—1962-ம் ஆண்டிற்கான அபிவிருத்தித் திட்டத்தின் முதல் அம்சம் ரூ. 10 லட்சம் செலவில் நிறுவப்படவிருக்கும் தண்ணீர் திட்டமாகும். தினமும் சுமார் 25 லட்சம் கலன் தண்ணீரை விநியோகிக்கக் கூடிய இத் தண்ணீர் திட்டத்தின் தண்ணீர் சேமிப்பு அளவு 500,000 கலனுகும். நாளொன்றுக்கு 5 தடவைகள் இத் தொகை தண்ணீத் மாற்றி நிரப்பப்படும். 1962 மார்ச் மாதத்தில் மேற்படி தண்ணீர் திட்ட வேலைகள் முடிவடையும் எனத் தெரிகிறது. சீனித் தொழிற்சாலை, வடிசாராயத் தொழிற்சாலை ஆகியவற்றிற்குத் தேவையான தண்ணீரையும் ஹிங்குரனை நகரத்துக்குத் தேவையான தண்ணீரையும் இத் தண்ணீர் திட்டம் உதவும்.

அம்பாறையிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரியை விஸ்தரிப்பதும் கல்லோயா சபையின் இந்த நிதிவருடத்திட்டங்களில் ஒன்றுகும். கல்லூரியின் ஆய்வுகூடத்தை விஸ்தரிப்பதும் சபையின் நோக்கமாகும். 4 லட்சம் ரூபாய் செலவில் நிறுவ ஆரம்பித்த தொழிலாளர்களுக்கான பங்களா கட்டட வேலைகளின்மிகுதி வேலைகளும் இந் நிதி வருட வேலைகளுடன் இணைக்கப்பட்டுப் பூர்த்தி செய்யப்படும்.

## ஹமர்ஷீல்ட் மரணம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஷோம்பேயும் ஐ. நா. பிரதிநிதி திரு. கிலாரியும் செய்து கொண்ட உடன்படிக்கை பற்றி திரு. மேனன் குறிப்பிடுகையில் இது காங்கோ பிரச்சினைக்குத் தீர்வு கிடைப்பதற்கு ஒரு ஆரம்ப நடவடிக்கையாகவும் அங்கு குழப்பம் நீங்கி அமைதி நிலவுவதற்கு ஒரு அறிகுறியாகவுமிருக்கலாம் என்று கூறினர்.

சோவியத் ரஷ்யப் பிரதிநிதி திரு. வல்லரின்ஸோரின் பேசுகையில் திரு ஹமர்ஷீல்டின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொண்டார். "காலனி ஆதிக்கக் கொடுமைகளை நீக்க புதிய தியாகங்களும் தேவையாக இருக்கிறது போலும்" என்று திரு. ஸோரின் கூறினர்.

அமெரிக்க பிரதிநிதி திரு. அட்லாய்ஸ் டீவன்சன் பேசுகையில் திரு. ஹமர்ஷீல்ட் மனிதகுலம் முழுவதற்கும் உரியவரென்ருர். அவரது சடலத்தை நியுயோர்க்கில் ஐ. நா. தலைமைக் காரியாலய மைதானத்தில் நல்லடக்கம் செய்ய வேண்டுமென்ருர்.

பர்மா பிரதிநிதி பேசுகையில் திரு. ஹமர்ஷீல்டுக்கு சமாதானத்துக்குரிய நோபல்பரிசு வழங்கப்பட வேண்டுமென்ருர்.

கானு, நைஜீரியா, பாகிஸ்தான் பிரதிநிதிகள் பேசுகையில் திரு. ஹமர்ஷீல்டின் மரணம் பற்றி பூரண விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர்.

கானு பிரதிநிதி பேசுகையில் திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்கு நாசவேலைகாரணமாக இருங்கலாமென்றே தோன்றுகிறதென்ருர். "காங்கோவின் விடுதலை வீரன் லுமும்பாவின் கொலைக்கு காரணமாகவிருந்த ஆபிரிக்காவின் கோழைத்தனமான எதிரி தான் திரு. ஹமர்ஷீல்டின் மரணத்துக்கும் காரணமாக இருக்க வேண்டும்" என்று அவர் கூறினர்.

இலங்கைப் பிரதிநிதி டாக்டர் ஜி. பி. மலலசேகரா பேசுகையில் உலக சமாதானத்துக்கு திரு ஹமர்ஷீல்ட் ஒரு நினைவுச் சின்னம் என்ருர்.

## உதவி அரசாங்க அதிபர் ஓய்வு பெறுகிருர்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றும் திரு. ஏ. தட்சணமூர்த்தி தமது 41 வருடகால அரசாங்க சேவையின் பின் நவம்பர் 15 ம் திகதியுடன் ஓய்வு பெறுகிருரெனத் தெரிகிறது.

யாழ்ப்பாணக் கச்சேரியின் உதவி அதிகாரியாகவிருக்கும் திரு. எஸ். இலங்கைநாயகமும் அக்டோபர் 6 ம் திகதியுடன் ஓய்வு பெறுகிருரெனத் தெரிகிறது.

## ஐயாறன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அதிகமாக எங்கும் திறக்க வேண்டுமென்று சில பிரகஸ்பதிகள் கேட்கிருர்களே! அட கடவுளே! புத்தம் சரணம் கச்சாமி!

* * *

சிதம்பரத்திலே சென்னை முதல் மந்திரி காமராஜ், நடராஜ மூர்த்திக்கு பால் அபிஷேகம் செய்யும் ஒரு படத்தை சென்னை பேப்பரில் கண்டதும் வியப்படைந்தேன். விஷயம் என்ன தெரியுமா? அங்கு ஹரிஜனங்களுக்கான நந்தனர் பெண்கள் உயர் நிலைப் பள்ளிக்கு இரு புதிய கட்டடங்களை அரசாங்கம் கட்டிக் கொடுத்தது. அந்தக் கட்டடத்தை முதல் அமைச்சர் திறந்து வைத்தார். மேடைக்கு எதிரிலே நிறுவப்பட்ட நடராஜ விக்கிரகத்துக்கு அவர் பால் அபிஷேகம் செய்ததும் இரு கட்டடங்களுக்கு முன் விடப்பட்டிருந்த இரு திரைகளும் தானுகத் திறந்து விட்டன! சிலர் கத்தரிக்கோல் கொண்டு நாடாவை வெட்டித் திறப்பார்கள். வேறு விதங்களும் உண்டு. ஆனு நடராஜருக்கு அபிஷேகம் செய்து திறக்கும் புதிய முறை மேலாக இருக்கிறதல்லவா? சபாஷ்! நல்ல 'ஐடியா'!

# செயற்கை ரப்பரின் போட்டி ஆபத்து

## மலாயா மந்திரி எச்சரிக்கை

கோலாலம்பூர்,

இயற்கை ரப்பர் உற்பத்தியாளர்கள் செயற்கை ரப்பரின் கடும் போட்டியை இன்னும் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளில் எதிர்நோக்க வேண்டிவரும் என வர்த்தக-தொழிலியல் அமைச்சர் இஞ்சே முகம்மது கிர்பின் ஜொகாரி எச்சரித்தார்.

கூட்டரசு மறுநடவு சிப்பந்திகள் தொழிற்சங்க வருடாந்தக் கூட்டத்தில் அவர் மேலும் பேசுகையில், அடுத்த சில வருடங்கள் மிகவும் சோதனைக் காலமாக இருந்து வரும் என்ருர்.

அதற்குள் செயற்கை ரப்பரின் போட்டிச் சவாலை சமாளிப்பதற்கேற்ப திடமான நிலைமையில் நமது ரப்பர் உற்பத்தித் தொழிலை வைத்துக் கொள்ள நாம் உயர்ந்த பட்சமான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவர் சொன்னர்.

### செலவும் குறையவேண்டும்

அத்துடன், எதிர்நோக்கியுள்ள செயற்கை ரப்பரின் கடும் போட்டியை சமாளிக்க இயற்கை ரப்பர் உற்பத்திச் செலவை குறைப்பதற்கு எல்லாவித முயற்சிகளும் எடுத்துக்கொள்வதன் அவசியத்தை வலியுறுத்திய அமைச்சர், எதிர்கால ஆராய்ச்சிகளின் முக்கியத்துவத்தையும் விளக்கினர்.

குறிப்பாக ஒரு பிரச்சினை நெடுநாட்களாகவே தமது மனதை சங்கடப்படுத்திக் கொண்டிருப்பதாயும், அது விஷயத்தில் சிங்கை நிதிஅமைச்சரையும் கலந்துகொண்டு, உடனடியான கவனம் செலுத்தும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு தாம் அறிவித்துள்ளதாயும் இஞ்சே கிர்பின் ஜொகாரி கூறி, இப் பிரச்சினைதான் தரக்குறைவான ரப்பர் கப்பலில் ஏற்றப்படுவதாகும் என்றும் விளக்கினர்.

### மற்றொரு முக்கிய பிரச்சினை

"வெளிநாடுகளுக்கு கப்பலில் ஏற்றப்படும் மலாயா ரப்பரின் தரத்தைக் கண்காணிக்கும் ஸ்தாபனமான மலாயன் ரப்பர் ஏற்றுமதி பதிவு போர்டு, கடந்த சில வருடங்களில் அவ்வளவு பலனுள்ளதாக இயங்கி வரவில்லை என்பதை நான் அறிவேன், எனவே, இந்த ஸ்தாபனத்தை முற்ருகத் திருத்தி அமைக்கப்படுவது அவசியமாகும் என்றும் அவர் சொன்னர்".

இதற்காக சிங்கை நிதி மந்திரியின் அனுசரணையுடன், இரு பிரதேசங்களையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்களடங்கிய கூட்டு செயல்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

### பரிசிலனைக் குழு

"அந்தக் குழுவின் அலுவல் ரப்பர் கப்பல் ஏற்றப்படுவது, சிப்பங்கள் கட்டப்படுவது சம்பந்தமான சட்டத்தைப் பரிசீலனை செய்து, நல்ல திட்டமான பயனுள்ள மலாயன் ரப்பர் ஏற்றுமதிப் பதிவு போர்டை அமைப்பதற்கு அவசியமான சிபார்சுகள் செய்வதாகும்", என்றும் அவர் கூறினர்.

## ஸ்புட்னிக் சமுகமளிக்கவில்லை

### மயிலிட்டிக் கோஷ்டிக்கு வெற்றி

மாவிட்டபுரம், திங்கள்

காங்கேசன்துறை பட்டின சபையின் ஆதரவில் திரு. எம். கார்த்திகேசு 'சலேஞ்' வெற்றிக்கிண்ணத்திற்காக மயிலிட்டி உதை பந்தாட்டக் கோஷ்டிக்கும், காங்கேசன் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெறவிருந்த உதை பந்தாட்டப் போட்டியில், ஸ்புட்னிக் கோஷ்டி போட்டிக்குச் சமுகமளிக்காதபடியால், மயிலிட்டிக் கோஷ்டிக்கு வெற்றி வழங்கப் பட்டது.



# மங்கையர் உலகம்



## நரையும் 'நைலோனும்'

— "கமலம்" —

கமலம்! கமலம்! என் கணவரின் குரல்தான் அது. காப்பிக்குத்தான் கூப்பிடுகிறார் என்று காப்பியுடன் அறைக்கு விரைந்தேன். புத்தகமொன்றை அவர் புரட்டிக்கொண்டிருந்தார். வெகுவாக யோசிப்பது போல் முகட்டை நோக்கியிருந்தது அவர் பார்வை. 'என்ன கூப்பிட்டீர்களே' என்றேன். 'இல்லை ஏதோ சொல்லவிருந்தேன் மறந்துவிட்டேன்' என்று தலையைச் சொறிந்தார். சிறிது நேரம் தாழ்த்தி, 'ஆகா! நீ அதனை வாங்கவில்லையா கமலம்?' என்றார். என்ன என்றேன். 'அதுதான் வலை ஒன்று' "எந்த வலை?" "அதுதான் அந்தத் தலை வலை" ஏதோ விகடம் சொல்வதற்குத்தான் பாசாங்கு செய்து கொள்கிறார் என்பதை ஊகித்துக் கொண்டு விபரமாகச் சொல்லுங்களேன் விளங்குவதற்கென்றேன். 'உனக்கு அது இப்போ வேண்டாம் கமலம் கொஞ்சம் வயது போனால்தான் அது அழகாக இருக்கும்' என்றார். எது வேண்டாம் என்ன அழகாக இருக்கும் என்று திரும்பவும் கேட்டேன்.

"கமலம் கோபித்துக் கொள்ளாதே இதுதான் நான் சொல்லவந்தது. இன்று காலை நான் காரியாலயம் சென்றபோது ஒரு அம்மாளைக் கண்டேன். நல்ல நரைத்த தலை. வெள்ளிக் கம்பிகள் போன்று அழகாக இருந்தது அவரின் கூந்தல். சாதாரண குடுமிதான் கட்டியிருந்தாள். ஆனால் குடுமியைச் சுற்றி ஒரு வலை நரை மயிராகையால் போலும், கறுத்த வலை பளிச்சென்று தெரிந்தது. அசல் மீன் வலைப் பின்னல். ஏன் அதைக் கொண்டையில் கொழுவ வேண்டுமே என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன். ஒரு வேளை எல்லாப் பெண்களுமே மாட்டிக் கொள்வார்கள். ஆனால் இந்த அம்மாளின் தலை நரைத்திருந்ததால் இவளின் 'கெட்' மட்டும் தான் எனக்குத் தெரிந்ததோ என்று யோசித்தேன். ஆனால் நீ 'கெட்' மாட்டிக்கொண்டதை நான் ஒரு நாளும் காணவில்லை. ஒரு வேளை அது இந்தக் கால 'பாஷன்' ஆக இருக்கலாம் அதுதான் கேட்டேன் கமலம்! என்று மூச்சு விடாமல் சொன்னார். என் கணவரின் அகட விகடப் பேச்சினால் எனக்குப் பொத்துக்கொண்டு சிரிப்பு

(2ம் பக்கம் பார்க்க)

## "செவிக்குணவு" இல்லாத குழந்தைகளை மறவாதீர்

கோலாலம்பூர் (கடிதம்) நாட்டிலுள்ள காதுகேளாத குழந்தைகளுக்குக் கல்வி போதிக்கும்நற்பணிக்குமலாயா மக்கள் தங்கள் ஆதரவையும் ஒத்துழைப்பையும் அளிப்பார்கள் என பேரரசர் சமீபத்தில் நம்பிக்கை தெரிவித்தார்.

இந்தக் குழந்தைகளின்எதிர்காலம் செழுமையாகவும்மகிழ்ச்சியாகவும் இருந்து வரும்படி நாம் செய்ய வேண்டும் என்றும் பேரரசர் கூட்டரசின் காது கேளாதவர் பாடசாலையின் சார்பில் வெளியிடப்படும் சஞ்சிகையின் முதல் இதழுக்கு வழங்கியுள்ள தமது ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

"வாழ்க்கையில் குறைபாடு உள்ளவர்களுக்கான உதவியை விரிவுபடுத்துவதற்குத் துணை புரிவதன் மூலம், இத்தகைய துர்ப்பாக்கிய நிலையில் உள்ள குழந்தைகளை அவைகள் வாழும் சமுதாயத்துக்குப் பயனுள்ள ஒரு பகுதியாக்குவதைவிட மகிழ்ச்சி தரக்கூடிய வெகுமதி வேறொன்று இருக்க முடியாது.

எனவே இப் பாடசாலையின் தலைமை ஆசிரியரும், இதர ஆசிரியர்களும் மேற்கொண்டுள்ள முயற்சி நன்கு வெற்றி பெற வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன" என்றும் பேரரசர் மேலும் அச் செய்தியில் கூறியுள்ளார்.

இப்பாடசாலையின் ஒவ்வொரு குழந்தை பற்றியும் நான் பெருமை கொள்கிறேன். அவர்களுக்குள்ள குறைபாடுகளை சமாளித்துக் கொள்வதில் அவர்கள் காட்டிவரும் ஊக்கமும், உறுதியும் மனதை உருக்கத்தக்க அனுபவமாகும்" என்றும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அந்தச் சஞ்சிகைக்கு வழங்கியுள்ள ஆசிச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## அன்புள்ள மாலதி (5)

அன்று பரிமளாவுடன் பேசி மகிழ்ந்தாயே! அப்பப்பா, இப்போது நீ பரிமளாவின் உற்ற தோழியாகியும் இருப்பாய். அவளை அறிமுகம்செய்து வைத்ததற்கு எனக்குத்தானே நீ நன்றி செலுத்த வேண்டும். அப்படியல்லவா, மாலதி.

மாலதி, ஒரு சுவையான சம்பவம் கேட்கப் போகிறாயா? சென்ற திங்கட்கிழமை நானும் பரிமளாவும் காரியாலயத்துக்குச் சென்றிருந்தோம். ஏதோ அலுவலாகச் சில பெண்கள் எமது காரியாலயத்துக்கு வந்திருந்தார்கள். வெளிப்புறம் இருந்து அவர்கள் போட்ட சத்தம் காரியாலயத்தில் வேலை செய்து கொண்டிருந்த அத்தனை பேரையும் குழப்பி விட்டது. அங்குள்ள ஒரு சிலர் முகத்தைச் சுளித்துக் கொண்டதையும் பார்த்தேன். காரியாலயத்தில் வேலை செய்பவரைத் தமது சத்தம் குழப்பி விடும் என்ற பகுத்தறிவு இவர்களுக்கு இருக்க வேண்டாமா? என்ன! அங்குதான் தமது வீட்டு விஷயங்கள் பற்றி உச்சஸ்தாயியில் பேசிக் கொள்ள வேண்டுமா! அவர்களைப் பார்த்த அளவில் மிகுந்த நாகரிகம் படைத்தவர்கள் போலத்தான் காணப்பட்டார்கள். ஆனால் போகும் இடங்களிலாவது மெதுவாகப் பேசிக் கொள்ள வேண்டுமே என்ற 'பண்பு' மட்டும் அவர்களுக்குத் தெரியாது போய் விட்டதே. இக் குறை பல பெண்களிடம் உண்டு. ஏன் இதைப் பெண்கள் உணர்ந்து கொள்ளக் கூடாது?

'எங்கள் பழைய வீட்டில் புதிதாக ஒரு குடித்தனம் வந்திருக்கிறது மாலதி. எனக்கும் நல்ல வாய்ப்பாகி விட்டது. அந்த அம்மாளுடன் பேசிப் பொழுது போக்கலாம் என்றிருந்தேன். ஆனால் அந்த அம்மாள் ஒரு புதுத்தினுசாக இருக்கிறது!

என்ன மாலதி இப்படியும் பெண்கள் இருக்கிறார்களே. அவள் காலையில் நேரத்துடன் விழித்துக் கொள்வதாகத் தெரியவில்லை. வேலைக்காரன் ஒருவன். ஏதோ காலை உண்டி அலுவல் முழுவதும் அவனுடைய பொறுப்புப்போல இருக்கிறது. பெண் என்ற ஸ்தானத்துக்காவது ஒரு மரியாதை கொடுக்க வேண்டாமா மாலதி. அந்த அம்மா நேர காலத்துக்கு எழுந்திருந்ததை நான் ஒரு போதும் கண்டதில்லை.

தன்னை அலங்காரம் செய்து கொள்வதுமில்லை. ஒரு நாள் கூட அவள் நெற்றியில் பொட்டுடன் அவளை நான் காணவில்லை. வீடு வாசலை அலங்காரம் செய்ய வேண்டுமே என்ற நினைவுமில்லாதவள் போல பகல் நேரங்களிலும் தூங்கியிருப்பாள். அவள் கணவரும் அவற்றை ஏற்றுக் கொள்கிறாரே. பெண்ணுக்கு அக்கறை இல்லாத போது புருஷன் என்ன செய்ய முடியும்? ஒரு குறையுமில்லாதவள். இரண்டு பிள்ளைகள், புருஷன் உண்டு. பார்த்தால் லக்ஷ்மீகரமில்லாத் தோற்றம். காரணம் சோம்பல்தானே. உனது கருத்து என்ன மாலதி. சிறு குடிசையில் வாழும் பெண்ணும் கூட்டிப் பெருக்கி நீராடிக் குங்குமமிட்டு லக்ஷ்மீ கரத்துடன் விளங்கலாம் அல்லவா?

இவ்வாறு ஒவ்வொரு பெண்ணும் இருந்தால் அதுவே தனிப் பண்பாடாகுமே. இந்த அம்மாளுக்கு இதனை உணர வைக்கத்தான் இருக்கிறேன்.

மாலதி உன் கணவருக்கு வேலை இடமாற்றம் கிடைத்துள்ளதா? அப்படியானால் நீயெல்லாம் இங்கேயே வந்து விடுவாய் அல்லவா? இனி கடதாசி தேடி, மைதேடி, பேனை எடுத்துக் கடிதம் எழுத வேண்டியதும் இல்லையே. இங்கு அடிக்கடி இருவரும் சந்தித்துக் கொள்ளலாம். அத்துடன் எவ்வளவோ பேசியும் கொள்ளலாம் உன் வரவை எதிர் பார்த்துக்கொண்டிருக்கிறேன்.

அன்புள்ள,
அருந்ததி

## கோத்தபாருவில் சம்பளமின்றி வேலை செய்யும் பெண்கள்

கோலாலம்பூர், (கடிதம்) கோத்தபாருவில் சுமார் 100 பெண்கள் அங்குள்ள ஒரு அம்யூஸ்மெண்ட் பார்க்கிலுள்ள 44 கோப்பிக் கடைகளில் வாடிக்கைக்காரர்களிடமிருந்து ஏதேனும் சிறுதொகை இனும் பெறும் நம்பிக்கையுடன், தினந்தோறும் தங்கள் நேரத்தை அங்கு கழித்துக் கொண்டிருக்கின்றனர்.

அவர்களுக்கு சம்பளம் எதுவும் இல்லை. அப்படியே கொடுக்கப்பட்டாலும் ஒறின்ரண்டு வெள்ளியும், ஒறின்ரண்டு சிகரெட் பெட்டிகளும், கடைகள் மூடப்படும் போது கடைக்காரரால் கொடுக்கப்படுகின்றன.

வாடிக்கைக் காரர்களுக்கு சேவையாற்றும் சுதந்திரம் வேண்டும் என்பது தான் அவர்கள் விருப்பமாகும்.

இத்தகவல், தொழில் அமைச்சின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பேராவிலுள்ள ஒரு சுருட்டுத் தொழிற்சாலை, அதில் வேலை செய்யும் பெண் தொழிலாளருக்கு வருடத்தில் 2 மாதச் சம்பளம் போனஸாகக் கொடுத்து வருவதாயும் அதே அறிக்கை கூறுகிறது

அந்த சுருட்டுத் தொழிற்சாலையில் வேலை செய்யும் மொத்தம் 76 தொழிலாளரில் 67பேர் பெண்கள். அவர்கள் அங்கு சுருட்டுகள் சுற்றுவது, புகையிலை பொறுக்குவது, வெட்டுவது, சிப்பங்கள் கட்டுவது போன்ற வேலைகள் செய்கின்றனர்.

அங்கு பெண் தொழிலாளர்களுக்கு மாதம் சுமார் 40 டொலர் சம்பளம் கொடுப்பதுடன் தொழிற்சாலையிலே சாப்பாடு கிடைக்கிறது.

தினச் சம்பள அல்லது குத்தகையாக வேலை செய்யும் பெண்களுக்குக்கூட வருடம் தலா 25 டொலர் வரை போனஸ் அளிக்கப்படுகிறது.

இந்தப் பெண்கள் மாதம் 65 டொலரிலிருந்து 105 டொலர் வரையிலுங்கூட சம்பாதிக்கின்றனர் [illegible] அறிக்கை

### அன்பான பேச்சு

"அழகிய முகம் ஒருவரை வசீகரிக்கும். ஆனால் அன்பான பேச்சு ஒருவரை அடிமைப்படுத்தும்"
—காந்தியடிகள்

## மல்லிகைத் தைலம் நீங்களும் செய்யலாம்

ஒவ்வொருவரும் சொந்தமாக தங்கள் உபயோகத்துக்கு மல்லிகைக் கூந்தல் தைலத்தை பின்காணும் முறைப்படி சுலபமாகத் தயாரித்து வைத்துக் கொள்ளலாம்.

ஒரு அலுமினியப் பாத்திரத்தில் அரைப்படி நல்லெண்ணெயைவிடவும். அதில் ஒரு ரூத்தல் மல்லிகைப் பூவையிட்டுப் பாத்திரத்தின் வாயை ஒரு துணியால் மூடிவெயிலில் வைத்து விடவும். மூன்று நாள் தொடர்ந்து இவ்விதம் வைத்த பிறகு துணியைத் திறந்து பூவைப் பிழிந்து நீக்கி விடவும்.

பிறகு மறுபடியும் ஒரு ரூத்தல் அன்றலர்ந்த மல்லிகையைப் போட்டு மூடி மீண்டும் வெயிலில் வைக்கவும். இம்முறை 7 நாட்கள் தொடர்ந்து வெயிலில் வைத்திருந்து பிறகு பூவைப் பிழிந்து வெளியேற்றி விடவும்.

மறுபடியும் மூன்றும் முறை ஒரு ரூத்தல் பூவைப் போட்டு 10 நள் வெயிலில் வைத்திருந்து பிழிந்து அகற்றிவிடவும். இவ் விதமே நான்காம் முறை 15 நாள், ஐந்தா முறை 30 நாள் வெயிலில் வைத்திருந்து பூவைப் பிழிந்து அகற்றி விடவேண்டும் இப்படிச் செய்தால் 60 வது நாள் கமகம என மணக்கும் நல்லதரமான மல்லிகைக் கூந்தல் தைலம் கிடைக்கும். அதை [illegible] செய்யலாம்.


தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்

33
303 ஊதுபத்திகளை
3003

உபயோகியுங்கள்.

யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.

தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.

சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெனிய.

குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார்
மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.

## பளையில் பல் நோயாளர் அவஸ்தை

பளை, வியாழன்

பளை அரசினர் ஆஸ்பத்திரியில் பல் வைத்தியத்திற்காக வரும் நோயாளர்கள் கடந்த இரண்டு வாரமாக மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகி வருவதுடன் டாக்டர்கள் இல்லாமையால் திரும்பிச்செல்லவேண்டியும் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதன் காரணமாக பிரத்தியேக வைத்தியர்களிடம் நோயாளர்கள் சென்று அவஸ்தைப்படவேண்டியும் ஏற்படுகிறதாம்.

கிளிநொச்சியிலிருந்து இந்த ஆஸ்பத்திரிக்கு ஒரு பல் வைத்தியர் அடிக்கடி வந்து போவதாகவும் கடந்த இரண்டு வாரங்களாக அவர் அங்கு வரவில்லையெனவும் செய்தியெட்டியிருக்கிறது.

இதனலேயே நோயாளர்கள் மிகுந்த கஷ்டத்துக்குள்ளாகியிருக்கிறுகளெனவும் இது பற்றி அதிகாரிகளுக்கு முறையிடப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

## ஹமர்ஷீல்டின் பூதவுடல்

### 29-ந் திகதி நல்லடக்கம்

ஸ்டாக்ஹோம், செப். 2

சமாதானத் தூதுசென்றுகொண்டிருக்கையில் விமான விபத்தில் உயிரிழந்த ஐ. நா. பொதுக்காரியதரிசி திரு. டாக் ஹமர்ஷீல்டின் பூதவுடல் இம்மாதம் 29-ந் திகதி அவரது தாயகமான சுவீடனில் பூரண ராஜாங்க மரியாதைகளுடன் நல்லடக்கம்செய்யப்படுமென்று சுவீடன் அரசாங்கம் அறிவித்துள்ளது

## வானெலி நிகழ்ச்சிகள

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**வெள்ளி 22-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 காலைக்கதிர், 7-30 திரை இசை, 7-45 பாலாம்பிகை நாகேந்திரம்—பக்திப்பாடல்கள், 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 என். கே. பரமசிவம்—நாகஸ்வரம், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 புல்லாங்குழல்.

இரவு 7-00 ஞான அஞ்சலி, 7-30 நேயர்விருப்பம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 விமர்சனங்கள், 9-30 பரமேஸ்வரி பரம்—பாட்டு, 10-15 தேர்ந்த இசை.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 பி. என். சுப்பய்யன்—நாகஸ்வரம்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப் பள்ளிகளுக்கு, 1-00 மாதர் நிகழ்ச்சி, 1-30 வாத்திய இசை, 1-50 குரல் இசை, 2-10 உயர்தரப்பள்ளிகளுக்கு.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடக சங்கீதம்), 5-45 காந்தி கதை, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-30 செம்பை வைத்தியநாத பாகவதர் — பாட்டு, 9-15 ஆர். ராமானுஜாச்சாரி—பேச்சு, 9-30 மெல்லிசைக் கதம்பம், 9-45 சென்னை அஞ்சல்.

## சீனவில் பிச்சைக்காரரே கிடையாதாம்!

### சீன சென்று திரும்பிய ஆசிரியர் கூறுகிறர்

உடுப்பிட்டி, வியாழன்

"செஞ்சீனவில் சென்றவிடமெல்லாம் செழிப்பும் சிரிப்பும் சிந்துவதைக் கண்டேன். ஏழைகள் பிச்சைக்காரர் என்போரின் அடிச்சுவட்டைக்கூட அங்கு நான் காணவில்லை. நாட்டின் துரித அபிவிருத்திக்காக மக்கள் தேசாபிமான உணர்ச்சியுடன் சலிப்பின்றி உழைத்து வருகின்றூர்கள்."

இவ்வாறு புதன்கிழமை பிற்பகல் "நான் கண்ட நவசீனமும் பாரதமும்" என்ற பொருள் பற்றி திரு. ஜே. எட்வேட் உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் சங்கக் கூட்டத்திற் பேசுகையில் குறிப்பிட்டார். மேலும் அவர் கூறியதாவது:-

"சீனவின் சாபக்கேடு என்று ஒரு காலத்தில் வர்ணிக்கப்பட்ட மஞ்சள் நதி இன்று மனிதவர்க்கத்தின் நலனுக்கான ஆக்கபூர்வமான வேலைகளுக்குப் பயன்படுகிறது. அங்கு கட்டாயப்படுத்தாது மக்கள் வேலை செய்கின்றனர். அங்கு உள்ள அரசாங்கம் தங்கள் அரசாங்கம் என்று மக்கள் உணர்ந்துள்ளனர். அழுக்கும், ஈக்களும் சீனவில் காணப்படாத இரு பொருட்கள். அங்குள்ள கோயில்களில் உண்மையான தூய்மை நிலவுகிறது."

இந்தியாபற்றிக் குறிப்பிடுகையில் "இந்தியாவில் ஏறக்குறைய 200,000 கிராமங்கள் உள்ளன. அங்கு வறுமை, அழுக்கு, அறியாமை ஆகிய சாபக் கேடுகளின் மத்தியிலேயே மக்கள் வாழ்கின்றனர்" என்று கூறினர்.

திரு. எம். சபாநாயகம் தலைமைவகித்த இக்கூட்டத்தில், செயலாளர் திரு. இ. யோகேஸ்வரன் நன்றி தெரிவித்தார்.

## மிளகாய் கொள்வனவை கூட்டுறவுச் சங்கங்கள் கைவிடும்?

### தரம்பிரித்தல் தாமதத்தின் விளைவு

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணக் கமக்காரர்கள் மிளகாய் உற்பத்தியைப் பொறுத்தவரை தனிப்பட்ட வியாபாரிகளுக்கு 'இரையாகி' வருகிறூர்களெனத் தெரிகிறது.

உத்தரவாத விலைத் திட்டத்தின் கீழ் ருத்தல் ரூ. 1. 35 சதத்துக்கு விற்கக்கூடியதாக விருந்து கூட்டுறவுச் சங்கங்களின் அசிரத்தையால் ருத்தல் ஒரு ரூபாவுக்கு தனிப்பட்ட வியாபாரிகளுக்கு விவசாயிகள் விற்பதாகத் தெரிகிறது. கூட்டுறவுச் சங்கங்கள் காலதாமதமாக மிளகாயைக் கொள்வனவு செய்வதும் சிலசமயம் இதில் அக்கறை செலுத்தாமல் இருப்பதுவும் இதற்கு காரணமாகவிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

வடபகுதி விளைபொருள் விருத்தி விற்பனவுச் சங்கங்களின் சமாசம் இந்த ஆண்டில் 326 அந்தர் மிளகாயை மாத்திரம் சங்கங்களிடமிருந்து கொள்வனவு செய்திருப்பதாகவும் கடந்த ஆண்டில் ஒரு அந்தரைத் தானும் கொள்வனவு செய்யவில்லையெனவும் தெரிகிறது.

மிளகாயைத் தரம் பிரித்தலில் ஏற்படும் தாமதமே இதற்குக் காரணமென அறியப்படுகிறது. இதனல் மிளகாய் கொள்வனவு செய்வதை கைவிட பல சங்கங்கள் முடிவு செய்திருப்பதாகத் தெரிகிறது.

## லுமும்பாவின் ஆதரவாளர்

### அமெரிக்காவினுள் செல்லதடை

நியுயோர்க், செப். 21

காலஞ்சென்ற காங்கோவின் முதலாவது பிரதமர் திரு. பட்ரிஸ் லுமும்பாவின் நெருங்கிய சகாவான திரு தோமஸ் கன்ஸாவுக்கு அமெரிக்காவுக்கு செல்வதற்கு அமெரிக்க ராஜாங்க இலாகா அனுமதி வழங்க மறுத்துவிட்டது. திரு. கன்ஸா இங்கு வந்திறங்கியவுடன் தடுத்துநிறுத்திவைக்கப்பட்டார்.

காங்கோவின் பிரதிநிதியாக ஐ. நா. சபைக் கூட்டத்தில் தாம் கலந்து கொள்வதற்கு வந்திருப்பதாக அவர் தெரிவித்ததுடன் அதற்கான அனுமதிப் பத்திரங்களையும் அவர் காட்டினர். என்றுலும் அது பழைய அனுமதிப் பத்திரங்களென்றும் அவை இப்பொழுது செல்லுபடியாகாதென்றும் அதிகாரிகள் தெரிவித்துவிட்டனர். நாளை அவர் காங்கோவுக்குத்திருப்பி அனுப்பப்படுவார்.

## ரூ. 291 கோடி செலவில் சென்னையின் 3 வது திட்டம்

சென்னை, செப். 21

சென்னை ராஜ்யத்துக்கான 3-வது திட்ட விபரங்களை ராஜ்ய அரசாங்கம் இன்று வெளியிட்டுள்ளது. மொத்தம் ரூ. 291 கோடி செலவுக்கு வகை செய்யும் இந்தத்திட்டத்திற்கு, மத்திய அரசாங்கம் ரூ. 190 கோடி வரை உதவும். விவசாயத்திற்கும், சிறுபாசன திட்டங்களுக்கும் ரூ. 24 கோடியும், பெரிய பாசனங்களுக்கு ரூ. 27 கோடியும் சமுதாய அபிவிருத்திக்கு ரூ 20 கோடியும் இதில் ஒதுக்கப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவில் சேமிப்பு வாரக் கூட்டம்

முள்ளியவளை, வியாழன்

வவனியா மாவட்டச் சேமிப்பு வாரக்கூட்டம் அரசாங்க அதிபர் திரு. எச். எ[illegible]. வணசிங்கா தலைமையில் முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க தமிழ்ப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

சிக்கனமாகச் செலவு செய்து சேமிப்பதன் அவசியம் பற்றியும் அதனல் நாடு அடையக்கூடிய அபிவிருத்தி பற்றியும் தேசிய சேமிப்பு இயக்க மேற்பார்வையாளர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை, முல்லைத்தீவு பட்டின சபைத்தலைவர் திரு எஸ். பி. மரியாம்பிள்ளை, பாடசாலைப் பரிசோதகர் திரு. வி. கந்தசாமி, கிராமாபிவிருத்தி மேற்பார்வையாளர் திரு. வி. கே. சுப்பிரமணியம் ஆகியோர் பேசினர்.

கரைத்துறைப்பற்றுப் பிரிவு பாடசாலைப் பிள்ளைகளின் கதம்பக்கச்சேரியும், இலவச சினிமாக்காட்சியும் நடைபெற்றன.

## காதைக் கடித்தாராம்

### அபராதம் ரூ. 60

மன்னர், வியாழன்

வெள்ளச்சாமி என்பவரின் காதைக் கடித்ததாக மன்னர் பெரிய கடையைச் சேர்ந்த கறுப்பையா என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் நீதவான் திரு. டி. ஜே. ராஜரத்தினம் எதிரிக்கு 60 ரூபாய் அபராதம் விதித்தார்.

## சிங்கள நாட்டிய நாடக விழா

கொழும்பு, வியாழன்

இலங்கை கலைக்கழகம் இம்மாதம் 30ந் திகதி சிங்கள நாட்டிய நாடகக்கலைவிழாவொன்றை ஆரம்பிக்கிறது. இவ்விழாவை கவரனர் ஜெனரல் சேர் ஒலிவர் குணத்திலகா ஆரம்பித்துவைப்பார். இந்த விழா ஒக்டோபர் 7ந் திகதி முடிவடையும்.


வருக! வருக!!

சுகாதாரத்துடனும் சுவைமிக்க காலைப் பலகாரம் காப்பியுடனும் இரவு, பகல், இரு வேளைகளிலும் விருப்பத்துக்குத் தகுந்தவாறு சைவம் அல்லது மீன் மாமிசத்தோடு ருசியான சாப்பாடு உண்டு.

இன்றே விஜயம் செய்யுங்கள்

**எஸ். எம். வைத்திலிங்கம்பிள்ளை**

408, மெயின் வீதி, மாத்தளை



**'சிரநேத்திராஞ்சன தைலம்'**

விடுதலையளிக்கும்போது

நீங்கள்

சிரசு கண் மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல் துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின் சக்தி நிறைந்த

ஒவ்வொரு 20 சொட்டுப் பிரமாணமும்

ஆச்சரிய பலனையளிக்கும்!

காலம் நீடித்த நோயாளர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்:

**மு. க. ஜெகநாதன்**

யூனனி கண் நிபுணர்

பெரியகடை யாழ்ப்பாணம்



**மொனரு அன் ரோஸ் பப்படங்கள்**

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது




மொனரு அன் ரோஸ் பப்படங்கள்

மூவர்ண கலர் லேபிளுடன் மயில் – ரோஸ் அடையாள மிட்டு




இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

**ஏ. எம். புகாரி அன் கோ**

99, நாலாம் குறுக்குத் தெரு,

கொழும்பு.

படை குறைப்பு அடிப்படைநெறி

# கொள்கையளவில் ரஷ்யா-அமெரிக்கா உடன்பாடு

நியுயோர்க், செப். 21

படை குறைப்பு அடிப்படை நெறிகள் சிலவற்றை அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கொள்கையளவில் ஏற்றுக்கொண்டுள்ளன.

பொதுப்படை குறைப்பு மகாநாடொன்றில் எந்த எந்த நாடுகள் அங்கம் வகிக்கவேண்டுமென்பதில் இரு நாக்களும் ஒன்றுசேர முடியாது போய் விட்டது.

நாடுகளுக்கிடையேயுள்ள பிரச்னைகளுக்கு சமாதான வழியிலேயே தீர்வு காணவேண்டுமென்பதை இருநாடுகளும் ஒப்புக்கொண்டன.

அமெரிக்காவின் சார்பில் ஜனாதிபதி கென்னடியின் படைகுறைப்புத் திட்ட விசேஷ தூதர் திரு. ஜோன் மக்ளோயும் ரஷ்யாவின் சார்பில் ஐ.நா.விலுள்ள ரஷ்ய தலைமைப் பிரதிநிதி யோரினும் நியுயோர்கில்ச்சந்தித்துப்பேச்சுவார்த்தை நடத்தியபின் வெளியிட்ட ஒரு கூள்டுஅறிக்கையிலேயே இதத கவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

படை குறைப்பு கட்டம் கட்டமாக செயல்பட வேண்டுமென்றும் குறிப்பிட்ட ஒரு கால வரம்பிற்குள் முழுவதையும் நிறைவேற்றிவிட வேண்டுமென்றும் அமெரிக்காவும் ரஷ்யாவும் ஒப்புக்கொண்டுள்ளன இது சம்பந்தமாக உறுதியான சர்வதேச ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் அவர்கள் இணங்கினர்.

ஆயுதப் போட்டியை நிறுத்த வேண்டுமென்றும் இரு அரசுகளும் ஒப்புக்கொண்டுள்ளன.

## கடாங்காவில் சண்டை நிறுத்தம்

எலிஸபெத்வில்லி செப். 21

கடாங்காவில் சண்டை நிறுத்த உடன்பாடு அமுலுக்கு வந்துவிட்டது. நேற்று நள்ளிரவுக்குப் பின் கடாங்காவில் ஐ. நா. படையினருக்கும் கடாங்கா துருப்புக்களுக்கு மிடையில் சண்டை நடைபெறவில்லையென அறிவிக்கப்படுகிறது.

ஐ.நா. பிரதிநிதி திரு. கியாரியும், ஷோம்பேயும் இந்த தற்காலிக போர்நிறுத்த உடன்படிக்கையில் கையொப்பமிட்டனர்.

ஆனால் கடாங்காவின் அடிப்படைப் பிரச்சினையான காடாங்கா பிரிவினைபற்றி அடுத்த 48 மணி நேரத்தில் மீண்டும் பேச்சுவார்த்தை நடைபெறக் கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## உபகாரச் சம்பளம்

கொழும்பு, வியாழன்

விஞ்ஞானம், கலை,கைப்பணி, கணிதம் ஆகிய பாடங் வில் விசேஷ திறமையுள்ள மாணவர்களுக்கு, உபகாரச்சம்பளம் வழங்குவது பற்றி கல்வி அமைச்சு ஆராய்ந்து வருகிறது.

## எஸ். எஸ். ஸி. ஆசிரியர் நியமனம் இல்லை

கொழும்பு, வியாழன்

எஸ். எஸ். ஸி. தராதரமுடையவர்கள் எவரையும் கல்விப்பகுதி ஆசிரியர்களாக நியமிக்கமாட்டாது. எஸ். எஸ். ஸி. தராதரமுடையோர் பயிற்சிக் கல்லூரிப் புகுமுகப் பரீட்சையில் தேறினல் தான் ஆசிரியர் நியமனத்துக்குத் தகுதியுடையவர்கள் எனக் கொள்ளப்படுவர்.

பயிற்சிக்கல்லூரிப் புகுமுகப் பரீட்சையில் தேறியவர்களுக்கு உடனடியாக ஆசிரிய நியமனம் அளிக்கப்பட்டுப் பின்னர் குறிக்கப்பட்ட பாடங்களில் இவர்கள் பயிற்சிக் கல்லூரியில் விசேஷ பயிற்சியளிக்கப் படுவார்கள் எனத் தெரிய வருகிறது.


வெற்றிகரமான 3-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)

நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

ஸ்ரீ கிருஷ்ணு (திருகோணமலை) மொடர்ன் (பதுளை)

லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)



சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த

பாவ மன்னிப்பு

மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 230

என். டி. ராமராவ், சௌகார் ஜானகி நடித்த

ராஜசேவை


## தமிழரசுக் கட்சிக்கு..

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கத்தவர்கள் விவாதிப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்.

தெரிவுக்குழுவில் பதினொரு அங்கத்தவர்கள் நியமிக்கப்படுவதற்குத்தான் வசதிசெய்யப் பட்டுள்ளதென்ருலும் இதுவிஷயமும் பல்வேறு அரசியல் கட்சிகளுடனும் கலந்தாலோசனை செய்தபின் சபையின் பரிசீலனைக்கு விடப்படும்.

செனட்சபைபற்றி நான் இப்பொழுது எதுவும் தெரிவிக்கக் கூடிய நிலையில் இல்லை. இது விஷயம்பற்றி அரசாங்கத்தின் கருத்து விரைவில் தெரிவிக்கப் படும்.

## 12 கத்தோலிக்க பாடசாலைகள் அரசாங்கம் எடுத்துள்ளது

கொழும்பு, வியாழன்

பார்லிமெண்டின் இன்றைய கூட்டத்தில் திரு. மெரில் பெர்னன்டோவின் கேள்வியொன்றுக்கு கல்விமந்திரியின் பார்லிமெண்டரிக் காரியதரிசி திரு. வி. டி. ஜி. கருணரத்தின பதிலளிக்கையில் 12 ரோமன் கத்தோலிக்க பாடசாலைகளை அரசாங்கம் தன்பொறுப்பில் எடுத்துள்ளதென்ருர். இந்தப் பாடசாலைகள்தேவாலய வளவினுள் இருப்பதால் இப் பாடசாலைகளின் எல்லைகளைக் கணக்கிடுவதில் இப் பாடசாலைத் தலைமையாசிரியர்ளுக்குச் சிரமம் ஏற்பட்டுள்ளதென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தவணை முறையில் காணிவரி

கொழும்பு, வியாழன்

காணிச் சொந்தக்காரர்கள், தமது காணி வரிகளைத் தவணை முறையில் செலுத்துவதற்கு, அவர்களுக்கு வசதியளிப்பதுபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்துவருகிறது.

# "என்னைக் குத்திப்போட்டான் என்று கூச்சலிட்டார்"

## நாவாந்துறை கொலை வழக்கில் சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

சென்ற பெப்ரவரி மாதம் 21-ந் திகதி நாவாந்துறை பீச்ரோட்டில் வசிக்கும் முருகுப்பிள்ளை குலவீரசிங்கம் என்பவரைக் கொலைசெய்ததாக சின்னப்பன் சிவகுரு என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கு நேற்று வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் டாக்டர் எச். டபிள்யூ தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

புரசிக்கூசன் தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு, பி. நகுலேஸ்வரன் ஆஜரானர். திரு. ஆர். விசுவநாதன், திரு. ஜே. டபிள்யு. சைமன் ஆகியோரின் அனுசரணையுடன் திரு. டி. எஸ். ஆனந்தா குமாரசாமியுடன் திரு. கே. வி. எஸ். சண்முநாதன் எதிரி தரப்பில் ஆஜரானர்.

நாவாந்துறையில் வசிக்கும் இளையதம்பியின் மனைவி தங்கம்மா (வயது 50) சாட்சியமளிக்கையில், இறந்தவர் தம்முடன் 4 வருட காலமாக வசித்துவந்தார் என்று கூறினர்.

தங்கம்மா தமது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது;-

"இறந்தவர் எனது இனத்தவரல்ல. பருத்தித்துறையைச் சேர்ந்த அவர், மேசன் தொழில் செய்து வந்தார். சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலை 7 மணிக்கே அவர் வேலைக்குச் சென்றுவிட்டார். சம்பவம் நடைபெற்ற சமயம் எனது கணவர் அங்கு இருக்கவில்லை. எனது வீட்டில் சாந்தகுமாரி (வயது 7), தவமணிதேவி (வயது 13) ஆகிய இரு குழந்தைகளும் வசித்து வந்தார்கள் இக்குழந்தைகள் எனது பெருமக்கள். சம்பவம் நிகழ்ந்தசமயம், லாம்பு எரிந்த கொண்டு இருந்தது. இறந்தவர், ஒரு சாய்மனக் கதிரையில் இருந்தார். சாந்தகுமாரிக்கு நான் பாடம்சொல்லிக் கொடுத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சிவகுரு, குலவீரசிங்கம் இருந்த இடத்திற்கு வந்தார். சிவகுருவை எனக்குச் சிறுவதிலிருந்தே தெரியும். இறந்தவரும் சிவகுருவும் கான்வஸ் கதிரையுடன் கீழேவிழுந்தனர். அப்பொழுது அவர், அவன் என்னைக் குத்திவிட்டான்......அவன் என்னைக் குத்திவிட்டான்! என்று கத்தினர். நான் ஓடிப்போய் சிவகுருவை தள்ளிவிட்டேன். இறந்தவர், வாசல்பக்கமாக ஓடிப்போனர்.

நான் அவரைப் பின்தொடர்ந்து கொண்டு 'தம்பி காக்கா' என்று கத்தினேன். அப்பொழுது தம்பிக் காக்காவின் கடையருகில் இறந்தவர் விழுந்துகிடந்ததைக் கண்டேன்.

பின்னர் தம்பிக் காக்கா, கார் ஒன்றை கொண்டுவந்தார். அதில் அவர் இறந்தவரை ஏற்றிக் கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்ருர். அங்கிருந்து நாங்கள் ஆஸ்பத்திரிக்குச்சென்ரோம்."

விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## பஸ்தொழிலாளர் சங்க மகாநாடு

### பரிசீலனைக்கு வரும் முக்கிய தீர்மானங்கள்

கொழும்பு, வியாழன்

அகில இலங்கை பஸ்தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இம் மாதம் 23, 24-ந் திகதிகளில் கொழும்பில் நடைபெறவிருக்கிறது.

வருடாந்த மகாநாட்டில் பின்வரும் தீர்மானங்கள் கொண்டுவரப்படவிருக்கின்றன.

1. எந்தக் காரணத்தைக் கொண்டும் பஸ் கட்டணம் உயர்த்தப்படக் கூடாது

2. பிரயாணிகளுக்கு திறமையான பஸ் சேவை அளிக்கப் படவேண்டும். 3. பஸ் தொழிலாளரின் சம்பளவிகிதம் கூட்டப்படவேண்டும். 4. ஒவ்வொரு தொழிலாளிக்கும் வாரத்துக்கு நாற்பத்தைந்தரை மணி நேர வேலை கொடுக்கப் படவேண்டும். 5. இ. போ. சவில் தொடர்ச்சியாக ஆறு மாதகாலம் தற்காலிகமாக கடமையாற்றிய ஊழியர்களை நிரந்தர சேவையில் சேர்த்துக் கொள்ளவேண்டும். 6 ஏற்கனவே சேவையிலுள்ள தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்படவேண்டும்.

## ஹமர்ஷீல்ட் மறைவுக்கு பார்லிமெண்ட் அனுதாபம்

கொழும்பு, வியாழன்

ஐ. நா. பொதுக் காரியதரிசி திரு. ஹமர்ஷீல்டின் அகால மரணத்துச்கு இன்று பார்லிமெண்ட் அனுதாபத் தீர்மானமொன்று நிறைவேற்றியது. அனுதாபத் தீர்மானம் நிறைவேறியதும் அங்கத்தவர்கள் எல்லோரும் எழுந்து நின்று ஒரு நிமிஷம் மௌன அஞ்சலி செலுத்தினர்.

அனுதாபத் தீர்மானத்தைக் கொண்டு வந்த கல்விமந்திரி ஜனப் பதியுதீன் மாமூத் திரு ஹமர்ஷீல்டின் மரணச் செய்தி உலகத்தையே அதிர்ச்சியிலாழ்த்திவிட்டதென்ருர்.

திரு. ஹமர்ஷீல்டின் திறமையையும் சேவையையும் அவர் பாராட்டிப் பேசினர்.

## நினைவுநாள் விடுமுறை திறைசேரி ஆட்சேபணை

கொழும்பு, வியாழன்

காலம்சென்ற பிரதமர் திரு. பண்டாரநாயக்கா நினைவுநாளை ஒரு விடுமுறை தினமாக்க வேண்டும் என சம்பளசபையொன்று செய்த தீர்மானத்துக்கு திறைசேரி ஆட்சேபணை காட்டியுள்ளது.

இன்றையநிலையில் பல நாட்களை விடுமுறைநாட்களாக்குவது சந்தர்ப்பத்துக்கு ஒவ்வாத செயலாகும் எனத் திறைசேரி அறிவித்துள்ளது. 23 சம்பள நிர்ணயசபைகளில் ஆக இரண்டு சபைகள் மாத்திரமே செப்டம்பர் 26-ம் திகதியை விடுமுறை தினமாக்கவேண்டும் எனத் தீர்மானித்துள்ளன.

## மனித உரிமைகள் தினம் இலங்கையில் அனுஷ்டிக்கப்படும்

கொழும்பு, வியாழன்

இவ்வருடம் டிசம்பர் மாதம் பத்தாம் திகதி இலங்கை முழுவதிலும் மனித உரிமைகள் தினம் கொண்டாடப்படவிருக்கிறது.

உள்நாட்டுக் கலாசார விவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ஷெல்டன் பெர்னன்டோ கூட்டிய ஒரு மகாநாட்டில் மனித உரிமைகள் தினத்தை டிசம்பர் 10ந் திகதி கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது.

இத்தினத்தையொட்டி பாடசாலை மாணவர்களிடையே மூன்று மொழிகளிலும் வியாசப்போட்டியொன்றை நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த மகாநாட்டில் கல்வி ஒலிபரப்பு அமைச்சு, கிராமாபிவிருத்தி அமைச்சு அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## ஐ. நா. வுக்கு இந்திய போர் விமானங்கள்?

புதுடில்லி, செப். 21

கடாங்காவிலுள்ள ஐ. நா. படைகளுக்கு உதவியாக 'ஜெட்' போர் விமானங்கள் அனுப்பும்படி ஐ. நா. படைவிடுத்தவேண்டுகோளை பாரத அரசாங்கம் பரிசீலனை செய்துவருகிறது.

கடாங்காவில் பாரதத் துருப்புக்கள் கொடூரமாக நடந்துகொண்டதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டை பாரதவெளிவிவகார இலாகா அதிகாரியொருவர் மறுத்தார்.

பாரதத் துருப்புக்கள் அம்புலன்ஸ் வண்டியொன்றின்மீது சுட்டதாகக்கூறப்பட்ட குற்றச்சாட்டு பற்றி அந்த அதிகாரி குறிப்பிட்டு, அம்புலன்ஸ் வண்டியில் சென்ற கடாங்கா துருப்பினர் இந்தியத் துருப்புக்கள் மீது சுட்டதால் இந்தியத்துருப்புக்கள் திருப்பிச் சுடவேண்டி நேரிட்டது என்ருர்.

கடாங்காவிலுள்ள ஐ. நா. படைகளிடம் போருக்கான டாங்கிகள், போர் விமானங்கள் எதுவும் இல்லையென்றும் ஆனல் பணத்துக்காக கடாங்காவில் சண்டையிடும் அந்நியர் போர்விதி முறைகளை மதித்து நடக்கவில்லையென்றும் அந்த அதிகாரி கூறினர்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 22-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.